லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-12 மே - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# மக்கள் தீர்ப்பு யாருக்கு?

சிறப்புப் பார்வை


வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
GENERAL ENERGY TONIC
Herbal Tonic
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்




# வாக்காளர்கள் ஏன் வரவில்லை?

தமிழகத்தில் *38* மக்களவை தொகுதிகளுக்கான தேர்தலும், *18* சட்டமன்ற தொகுதிகளின் இடைத் தேர்தலும் கடந்த 18ம் தேதி நடந்து முடிந்துவிட்டது. தேர்தல் அமைதியாக முடிந்தது அனைவருக்கும் நிம்மதியை தந்துள்ளது. ஆனால், வாக்குப்பதிவு என்பது சராசரியாக *71.87* சதவீதம் என்ற அளவில்தான் நடந்துள்ளது. அதிகபட்சமாக தர்மபுரியில் *80.49* சதவீதமும், குறைந்தபட்சமாக தென் சென்னையில் *56.41* சதவீதமும் பதிவாகியுள்ளது.

பொதுவாக, கோடை வெயில் சுட்டெரித்த போதிலும், மக்கள் ஆர்வமுடன் வந்து வாக்குப்பதிவு செய்ததை பரவலாக காண முடிந்தது. பொதுத்தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கடந்த ஒரு மாதமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. மேலும், தேர்தலில் வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரின் ஜனநாயக உரிமை, கடமை என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஒவ்வொரு *5* ஆண்டுக்கும் ஒருமுறை நடைபெறும் பொதுத்தேர்தலில் நம்மை ஆளும் அரசை தேர்ந்தெடுப்பதில் மக்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பது ஜனநாயகத்தின் உயிர் மூச்சு. வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டால், பாதிப்பு என்பது பொதுமக்களுக்குத்தான் என்பதை தேர்தல் முடிந்த பின்னர் உணர்ந்து வருந்தி என்ன பயன்? அடுத்து ஆட்சி மாற்றத்துக்கு 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். அதற்குள் எவ்வளவோ நிகழ்வுகள் நடந்து முடிந்துவிடும். அதனால், வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்துவது என்பது ஒவ்வொரு வாக்காளரின் தலையாய கடமை என்பதை கல்லூரி கல்வி காலத்திலேயே இளைய சமுதாயத்தினருக்கு உணர்த்த வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகும். நாடு சுதந்திரம் பெற்று *70* ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இன்னும் தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்காளர் பட்டியலில் குளறுபடி, பெயர்கள் ஒட்டுமொத்தமாக நீக்கம் போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்கின்றன. தவறுகள் இல்லாத வாக்காளர் பட்டியலை தயாரிப்பதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.

அதற்கு வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும். அப்போதுதான், ஒருவருக்கே பல தொகுதிகளில் வாக்குகள் இருப்பதை தவிர்க்க முடியும். மேலும், தேர்தலில் வாக்களிப்பதை கவுரவமான செயலாக மாற்ற வேண்டும். இதற்காக தேர்தல் ஆணையம் கோடிக்கணக்கில் செலவு செய்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தினாலும் மக்கள் ஆர்வம் செலுத்தவில்லை என்றால், அதற்கான காரணங்களை ஆராய வேண்டும்.

நல்ல வேட்பாளர்களை களத்தில் நிறுத்த வேண்டும். தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இதுபோன்ற செயல்களால் கட்சிகள் மக்களின் நன்மதிப்பை பெற்றால் ஜனநாயகம் தழைத்தோங்கும். மக்கள் ஆர்வமுடன் தேர்தல்களில் வாக்களிப்பார்கள். வாக்குப்பதிவும் நூறு சதவீதத்தை எட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

**- ஆசிரியர்**

இந்தியாவில் வேலைவாய்ப்பு எப்படி இருக்கிறது? என்ன மாதிரியான மாற்றங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது? இளைஞர்கள் சந்திக்கும் சவால்கள் என்னென்ன? இவை யெல்லாம் அலசப்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். 2008-ல் பொருளாதா ரத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற அமெரிக்க பொருளாதார அறிஞர் பால் க்ரூக்மான், இந்தியத் தொழில்துறையில் சரியான பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கவில்லையென்றால் மிகப்பெரிய வேலையில்லாத் திண்டாட்டத்தை இந்தியா சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# வேலை கொடுக்காத அரசுகள்! தீர்வு என்ன?

காரணம், இந்தியத் தொழில் துறை தொடர்ந்து பல்வேறு பரிணாம மாற்றங்களை அடைந்துவருகிறது. ஒரு காலத்தில் உற்பத்தி துறை பெரும்பான்மை சதவீதமாக இருந்தது. ஆனால், தற்போது சேவைத் துறை அந்த இடத்தைப் பிடித்துள்ளது. எனவேதான் மென்பொருள், செயற்கை நுண்ணறிவூட்டப்பட்ட ரோபோக்கள் போன்றவைகளின் சேவைகளை உள்நாட்டிலேயே பெறுவதற்கு போதிய கட்டமைப்புகளை ஏற்ப டுத்தாமல், மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் பட்சத்தில் இந்திய சேவைத் துறை மிகப்பெரிய சரிவைச் சந்திக்க நேரிடும் என்று பால் க்ரூக்மான் குறிப்பிடுகிறார். அதாவது, சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களாகக் கருதப்படும் பணியிட எந்திரமயமாக்கல் (workplace automation), செயற்கை நுண்ணறிவூட்டப்பட்ட எந்திரங்கள் (artificial intelligence), வலவனிலா வானூர்திகள் (drones), ரோபோமயமாக்கல் (robotization), மெய்நிகர் உதவி (virtual assistance) மற்றும் பிளாக் செயின் (block chain) போன்ற அறிவியல் வளர்ச்சிகள் வேலையின்மையை மேலும் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

கணினி கண்டுபிடிக்கப்பட்டு மனிதர்கள் செய்ய வேண்டிய சில கடினமான வேலைகளைக் கணினிகள் செய்யத் தொடங்கிய போதும், வேலை பறிபோகும் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆனால், இன்று கணினி மற்றும் மென்பொருள்கள் தொடர்புடைய தொழில்களே அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். கணினி போன்ற மின்னணு சாதனங்களின் அளப்பரிய பங்களிப்பு இல்லாத இடங்களை பார்க்கவே முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. இன்று விண்கலங்கள், செயற்கைகோள்கள் மற்றும் ஏவுகணைகளை இயக்குவதற்கு உதவியாக இருப்பதிலிருந்து வறண்ட பூமிக்குக் கீழே நீர் இருக்கிறதா என்று சோதனை செய்வது வரைக்கும் இந்தக் கணினிகள் பேருதவியாக இருக்கின்றன.

இந்த வரிசையில் சமீபத்திய வரவாக இருப்பது தான், ஆட்டோமேஷனும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும். இன்று கூகிள் அசிஸ்டன்ட் (Google Assistant)-ன் உதவியுடன் நமது அன்றாட நிகழ்வுகளைப் பட்டியலாக்கி வரிசைப்படுத்தி நினைவுறுத்தச் செய்ய முடிகிறது. அருகிலுள்ள காபி, சிற்றுண்டி, உணவகங்கள், சினிமா தியேட்டர்கள், பெட்ரோல் ஸ்டேஷன், மருத்துவமனைகள் போன்றவைகளை இருந்த இடத்திலிருந்தே அணுக முடிகிறது. அரிஸ்டாட்டில் என்கிற ஒரு ரோபோ வீட்டில் குழந்தைகளுக்கு படுக்கை நேர கதைகளை சொல்கிறது. ஸ்டீவ் என்கிற ஒரு பாதுகாப்பு ரோபோ தெருக்களை வலம் வந்து தீ பரவும் இடங்களை கண்டுபிடிக்கிறது. நாணி என்கிற ரோபோ கோழி வளர்ப்பு இடங்களில் கோழிகளுக்கு வரும் சுகாதார சீர்கேடுகளைக் கண்காணிக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டுகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் தொய்வு ஏற்பட்டுள்ளதைக்

கண்கூடாகக் காணமுடிகிறது. ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரப்படி 2015-16ல் 48 கோடி மக்கள் பல்வேறு துறைகளில் வேலை செய்து கொண்டிருந்தனர். இவர்களில் 42% வேளாண் துறையிலும், 14% கட்டுமானத் துறையிலும், 12% பேர் வர்த்தகம் மற்றும் ஹோட்டல் துறையிலும், 12% பேர் தொழில் துறையிலும், 11% சமூகம் மற்றும் தனிப்பட்ட சேவை சார்ந்த துறையிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனால், புதிய வேலைவாய்ப்புகள் என்பது கடந்த காலங்களில் சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. 2010-11 மற்றும் 2015-16க்கு இடையில் 1.5 கோடி பேர் மட்டுமே புதிய வேலைகளில் சேர்ந்துள்ளனர்.

இதில் வணிக சேவைதான் அதிகபட்ச வேலைவாய்ப்பினை (23%) உருவாக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து தொழில் துறை, கல்வித் துறை, வர்த்தகத் துறை, மற்றும் போக்குவரத்து துறை போன்றவை முறையே 17%, 12%, 11%, 11% வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளன. மாறாக இதே காலகட்டத்தில் 12 லட்சம் பேர் ஜவுளி மற்றும் தோல் தொழில்களிலும், 9 லட்சம் பேர் மரம் மற்றும் மரச்சாமான்கள் சார்ந்த தொழில்களிலும் வேலையை இழந்துள்ளனர்.




சமகாலத்தில் உச்சத்தில் உள்ள துறைகளான மின்னணு, ஆப்டிகல் உபகரணங்கள், உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பு போன்றவைகளும் மிகச் சிறிதளவே புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவி செய்துள்ளன. மேலும் இந்த 5 ஆண்டுகளில் 2.7 கோடி பேர் வேளாண் சார்ந்த தொழில்களிலிருந்து வெளியேறியுள்ளனர். ஆனால், அதேயளவு மக்கள் கட்டுமானத் தொழில்களில் அமர்ந்துள்ளனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த மாற்றமே வேளாண் தொழிலில் அதிக கூலி உயர்வுக்கும் மற்றும் விவசாயிகளின் துயருக்கும் ஒருவகையில் காரணமாகும்.

இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் தரவுகள்படி 2014-லிருந்து 2018-க்குள் விவசாயக் கூலி 27%மாக உயர்ந்துள்ளது, குறிப்பாக விளைபொருட்களைப் பறிப்பதற்கான கூலியானது 41%மாக அதிகரித்துள்ளது. இது சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை பெருமளவு பாதித்தது. விவசாயத் தொழிலோடு ஒப்பிடுகையில், மற்ற துறைகளில் வருமானம் அதிகமாக இருப்பதால் எதிர்காலத்திலும் இப்போதுபோல வேளாண்மையிலிருந்து மற்ற துறைகளுக்கு வேலையாட்கள் செல்வது தொடர வாய்ப்பிருக்கிறது.

எனவே தொழில் துறையைப் பொருத்தவரை, புதிய மாற்றங்கள் வேலையில்லா நிலையை உருவாக்குவதுபோன்ற ஒரு தோற்றம் இருந்தாலும், மறுபக்கம் புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கிறது என்பதும் உண்மை. ஆனால், அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் திறன் நம்மிடம் இருக்கிறதா என்பதில்தான் சிக்கல் இருக்கிறது. ஒரு மென்பொருளையோ அல்லது ரோபோவையோ உருவாக்கக்கூடிய அல்லது கையாளக்கூடிய அறிவு நமக்கு தேவைப்படுகிறது.

பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் செயற்கை நுண்ணறிவூட்டப்பட்ட ரோபோக்கள் நிதி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு துறை போன்றவற்றில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கேற்ப மக்களும் தங்களை மேம்படுத்திக் கொள்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில், இந்தப் புதிய தொழில்நுட்பங்களில் 7% க்கும் குறைவான மக்களே வேலை செய்கின்றனர். இந்தத் துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிகமாக இருந்தாலும், திறன் பற்றாக்குறையும் ஆட்கள் தட்டுப்பாடும் உண்டாகின்றன.

எனவே, அரசும் தொழில்துறை அமைப்புகளும், புதிய வேலைவாய்ப்புகளை வரவேற்பு முழுத்திறமையுடன் செயலாற்றி பொருளாதாரத்தை மேம்படுத்தும்படியான திறமைசாலிகளை உருவாக்க வேண்டும். இந்த இடைவெளியை நிரப்பினால் மட்டுமே இந்தியா மேலும் சிறப்பான வளர்ச்சியை எட்டும். இல்லையெனில், வேலைவாய்ப்பினைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து குண்டும் குழியும் நிறைந்த சாலைகளில்தான் நாம் பயணிக்க வேண்டியிருக்கும்.

**- K. ரமேஷ் குமார்**

## படித்தவர்கள் பாராளுமன்றம் ஏன் வரவில்லை?

# எப்போது அதிகரிக்கும்?

ஒவ்வொரு தேர்தலிலும் முதன்முறையாக வாக்களிக்கவரும் வாக்காளர்கள், தங்கள் கனவுகளைப் பிரதிபலிக்கும் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில்தான் ஆர்வம் காட்டுவார்கள். இளம் தலைமுறைத் தலைவர்கள்தான் தங்கள் எதிர்பார்ப்புகளை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுவதில் வியப்பேதும் இல்லை. ஆனால், அரசியல் கட்சிகளின் கணக்குகளில், தலைவர்களின் வயதுகளுக்கு மட்டும் வரம்பே இருப்பதில்லை.

பதவிக்காலம் முடியும் 16-வது மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் 12 பேர் மட்டுமே 30 வயதுக்கும் குறைவானவர்கள். 204 பேரின் வயது 30 முதல் 55 வரை. 212 பேர் 56 முதல் 70 வயது வரையிலானவர்கள். 41 பேரின் வயது 70-க்கும் மேல். இந்திய மக்கள்தொகையில் 50%-க்கும் கீழே 30 வயதுக்கும் குறைவானவர்கள் என்னும்போது அதைப் பிரதிபலிக்கும் வகையில் வேட்பாளர்களின் வயதும் இருக்க வேண்டும். ஆனால், எத்தனைக் கட்சிகள் இதைக் கருத்தில் கொள்கின்றன என்பது கேள்விக்குறியே!

இன்றைக்கு இளைய சமுதாயத்தினரில் 80% பேர், சமூகவலைதளங்களைப்பயன்படுத்துவதன்மூலம் நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்வதாக, சமீபத்தில் ட்விட்டர் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்திருக்கிறது. புதிய வாக்காளர்களில் 90%-க்கும் மேற்பட்டோர் இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால், அரசியல்



கட்சிகளைப் பொறுத்தவரை, இளைஞர்களுக்குப் போதிய வாய்ப்பு தருவதில்லை. அப்படியே தந்தாலும் ஏற்கெனவே உறுப்பினர்களாக இருந்தவர்களின் வாரிசுகளுக்கே பெரும்பாலும் வாய்ப்புகள் சென்றடைகின்றன.

வயது முதிர்ந்த தலைவர்களின் அரசியல் அனுபவம் அவசியமானது என்றாலும் மூப்பின் காரணமாக எழும் உடல் உபாதைகள் குறித்தும் பரிசீலிக்க வேண்டும். அவர்கள் முழுநேர அரசியலில் ஈடுபடுவது சிரமம். சுற்றுப்பயணம்



செய்ய முடியாது. நினைவாற்றல் குறையவும் வாய்ப்பு உண்டு. உடலுக்கும் மனதுக்கும் மூப்பு சோர்வைக் கொண்டுவந்துவிடுகிறது. எல்லா துறைகளிலும் ஓய்வுபெறும் வயதை 58 அல்லது 60 என்று நிர்ணயித்துவிட்டு அரசியலுக்கு மட்டும் ஓய்வுபெறும் வயது இல்லை என்பது விந்தைதான்.

அமெரிக்காவில் இருப்பதைப் போல நம் நாட்டிலும் இரண்டு முறை அல்லது பத்தாண்டுகளுக்கு மேல் யாரும் மத்திய, மாநில அமைச்சர்களாகவோ, முதல்வர்கள், பிரதமர் களாகவோ பதவி வகிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றுவதைக் குறித்தும் பரிசீலிக்கலாம். இதனால், குறைந்தபட்சமாக நாடாளுமன்றம், சட்டமன்றங்களிலாவது இளைஞர்கள் உள்ளே நுழைவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

- கனக துர்கா


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 இதழ்-12 மே-2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. **அருணாச்சலம்**, A.C. **குமார்**, S. **அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
P. **ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், M.முருகன், சத்தியநாராயணமூர்த்தி
N.குப்புசாமி, நீலகண்டன், N.சீனிவாசன்
B.நாராயணசாமி, G.ஆனந்த்குமார், S.மோகன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# குணப்படுத்துபவரா? வேட்டையாடுபவரா?

மருத்துவர்களைக் கடவுளுக்கு நிகராகப் போற்றிய நாடு இந்தியா. ஆனால், கடவுளுக்கு நிகராகக் கொண்டாடப்பட்ட மருத்துவர்கள் இன்று சமூகத்தால் தூற்றப்படுகிறார்கள். மருத்துவத்தில் நிரவியிருக்கும் ஊழலால் மருத்துவத்தை உயர்வாகக் கருதிய சமூகப் பொதுப்புத்தி இன்று நீர்த்துப் போய்விட்டது.



மருத்துவர்கள் இன்று சந்தேகக் கண்களுடன் அணுகப்படுகிறார்கள். மருத்துவமனைகள் இன்று பணம் பறிக்கும் இடமாகக் கருதப்படுகின்றன. மருத்துவத்தின் மீதான நம்பிக்கை அவநம்பிக்கையாக எப்போது மாறியது, எதனால் அது நிகழ்ந்தது, இதற்கு யார் காரணம்? போன்ற அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கும் விதமாக எழுதப்பட்டிருக்கும் புத்தகம்தான் 'Healers or Predators?' மருத்துவத்தின் மீதான பொதுப் பிம்பங்கள் அனைத்தையும் இந்தப் புத்தகம் பொய்யாக்கி விடுகிறது. 43 அத்தியாயங்கள் கொண்ட இந்த 600 பக்கப் புத்தகம் 50-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், சமூக சேவகர்கள், பொதுச் சுகாதார நிபுணர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் இந்தப் புத்தகத்தின் மூலம் எழுத்தாளர்கள் ஆகியுள்ளனர். இந்தப் புத்தகத்தின் முன்னுரையை நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் எழுதியுள்ளார். மருத்துவத்தின் இருண்ட பக்கங்களில் ஒளியைப் பாய்ச்சும் இந்தப் புத்தகத்தை அவர் 'அற்புதம்' எனச் சிலாகிக்கிறார். 'குணப்படுத்துபவரா, வேட்டையாடுபவரா?' என்பதே இதன் தலைப்பின் அர்த்தம். மருத்துவ உலகில் நிலவும் அந்த இரண்டு சாத்தியங்களை மட்டும் இந்தப் புத்தகம் பேசவில்லை; இது முக்கியமாக அந்த இரண்டு சாத்தியங்களுக்கு இடையில் நிரம்பி இருக்கும் அனைத்து அவலங்களையும் புள்ளிவிவரத்துடன், உண்மைக்கு வெகு அருகிலிருந்து நேர்மையுடன் பேசுகிறது.


எப்படி எல்லா மருத்துவர்களும் குணப்படுத்துபவர்கள் இல்லையோ அதே போன்று எல்லா மருத்துவர்களும் வேட்டையாடுபவர்கள் இல்லை' என்று சொல்வதன் மூலம், நமது சமூகத்தில் இன்றும் மீந்திருக்கும் நேர்மையான மருத்துவர்களை, அக்கறையுடன் பாதுகாக்கிறது. இந்தப் புத்தகத்திலிருக்கும் பின்புலம் (Background) எனும் பகுதி தனித்துவமானது. அந்தப் பகுதியிலிருக்கும் அத்தியாயங்கள், இந்திய மருத்துவத்துறையில் நிலவும் புதுவகையான ஊழலை அலசி ஆராய்கிறது. மருத்துவத்துறையில் இருப்பவர்களுக்கு, குறிப்பாக அதில் நிலவும் ஊழலைப் பற்றித் தெரியாதவர்களுக்கு இந்தப் பகுதி மிகுந்த அதிர்ச்சியளிக்கும். சிலருக்குத் தடம் மாறும் வழியை அது காட்டலாம்.

உதாரணமாக, முதல் அத்தியாயம், மருத்துவத்துறை ஊழலுக்கு ஆட்பட்டதற்கான வரலாற்றுக் காரணிகளை எளிதில் புரியும் விதமாகப் பட்டியலிடுகிறது. '1940-களில் நாட்டில் மருத்துவர்களின் தேவை அபரிமிதமாக இருந்தது. அரசாங்கம் மருத்துவமனையில் ஒரு மணிநேரம் மட்டும் வெளி நோயாளிகளைப் பார்க்கும் மருத்துவரைக் காண்பதற்கு 75-க்கும் மேற்பட்ட நோயாளிகள் முண்டி மோதுவது அப்போதைய வழக்கம். மருத்துவத்தில் ஊழல் எப்படி நுழைந்தது என்று இப்போது உங்களுக்குப் புரிகிறதா? லஞ்சம் கொடுப்பதன் மூலம் மருத்துவரின் தனிக் கவனத்தைப் பெற அன்று சிலர் முயன்றனர். இன்று அது பல வடிவங்களில் பல்கிப் பெருகி ஒட்டுமொத்த மருத்துவ உலகையும் புதைகுழிக்குள் தள்ளி உள்ளது' என ஊழலுக்கான தொடக்கப் புள்ளியை அது விவரிக்கிறது.

“நாம் தனியாக இல்லை (we are not alone)’ எனும் அத்தியாயம், ‘மருத்துவ ஊழல் என்பது இந்தியாவின் பிரச்சினை மட்டும் இல்லை, அது உலகின் பிரச்சினை என்று தெளிவாக உணர்த்துகிறது. இந்தியாவின் அண்டை நாடுகளான வங்கதேசம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் சுகாதாரத்துறையில் நிலவும் பல விதமான ஊழலை அது விரிவாக அலசுகிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்தியாவைப் போன்றே அங்கும் தனியாருக்கு லாபம் ஈட்டித் தரும் நோக்கில் அரசியல்வாதிகள் அரசு இயந்திரத்துடன் கைகோத்து உள்ளனர்.

இங்கே போன்று அங்கும் தனியார் மருத்துவமனைகள், நோயாளிகளின் நலனைப் பின்னுக்குத் தள்ளி, லாபத்தை முன்னிறுத்திச் செயல்படுகின்றன. இந்தியாவைப் போன்றே அங்கும் மருத்துவத்துறைக்கு எதிரான கொந்தளிப்பு நிலவுகிறது. அங்கும் மக்களின் நம்பிக்கையை மருத்துவத்துறை இழந்துள்ளது. மருத்துவத்துறையில் சீர்திருத்தம் வேண்டி அங்கொன்றும் இங்கொன்றுமாக அங்கேயும் போராட்டங்கள் நடக்கின்றன எனத் தரவுகள் உதவியுடன் தெரிவிக்கிறது.

இந்தப் புத்தகம் மருத்துவத்துறையில் நிகழும் ஊழலைத் தனித்துப் பார்க்கவில்லை; மற்ற துறைகளின் ஊழலோடு சேர்த்தே மருத்துவத்துறையின் ஊழலை அணுகுகிறது. இதற்குச் சரியான உதாரணம், இந்தப் புத்தகத்தில் அலசி ஆராயப்படும் வியாபம் ஊழல். அந்த ஊழலின் அனைத்துப் பரிமாணங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் நோக்கில் அது விவரிக்கும் தகவல்கள் மலைப்பை ஏற்படுத்துகின்றன. சொல்லப்போனால் ஒரு வித அச்சத்தை ஏற்படுத்துகின்றன. நமது சமூகம் எந்த அளவுக்குத் தரம் தாழ்ந்து உள்ளது என்பதற்கு, மருத்துவத்துறையும் மற்றத் துறைகளும் கைகோத்து நிகழ்த்தியுள்ள இந்த மாபெரும் ஊழலே சான்று என அது ஆதங்கப்படுகிறது. மருத்துவத்தால் கிடைக்கும் பெருமை, புகழ், வளம் போன்றவற்றுக்காக இந்தச் சமூகம் எத்தகைய கீழ்மையான நிலைக்கும் செல்லத் தயாராக இருப்பதாக இது முகத்தில் அறைந்து சொல்கிறது.




மருத்துவத்தைப் புனிதமாகக் கருதிய காலம் ஒன்று இருந்தது. அதில் மருத்துவர்கள் தேவதூதர்களாக இருந்தனர். ஆனால், இன்று காலம் மாறிவிட்டது, புனிதம் என்பது பெயருக்குக்கூட மருத்துவத்தில் இல்லாமல் போய்விட்டது. அசிங்கம் என்றோ இகழ்வு என்றோ எதையும் சமூகத்தின் நன்னடத்தை விதிகளின் அடியில் மறைத்து வைக்க முயலாமல், மருத்துவத்தில் நிகழும் அனைத்து அவலங்களையும் எந்தத் தயக்கமும் இன்றிப் பொதுவெளியில் இந்தப் புத்தகம் துணிவுடன் பேசுகிறது. தவறைச் சுட்டிக்காட்டுவது மட்டும் இந்தப் புத்தகத்தின் நோக்கம் அல்ல.

அது அந்தத் தவறுகளின் காரணிகளைக் குறித்து நம்முடன் ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுகிறது. அந்தக் கலந்துரையாடலின் மூலம், மருத்துவத்துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைகிறது. மறுமலர்ச்சி வெகுதொலைவில் இல்லை என்ற நம்பிக்கையைப் படிப்பவரின் மனங்களில் இந்தப் புத்தகம் ஆழமாக விதைக்கிறது. இதைப் படித்த அனைவருக்கும் தாம் செய்ய வேண்டியது என்ன, செய்யக் கூடாதது என்ன என்ற புரிதல் கண்டிப்பாக ஏற்படும். அந்தப் புரிதலே இந்தப் புத்தகத்தின் வெற்றி.

- V. அருணாச்சலம்

முனைவர் ஆ.மவுரியன்





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(19)

# ஈ.வெ.ரா. நாகம்மையார்

**தமது சுகவாழ்வைத் துறந்தார். விலையுயர்ந்த நகைகளைத் துறந்தார். மெல்லிய பட்டாடைகளை வெறுத்தார். முரட்டுக் கதராடை உடுத்தினார்**

**ஒத்துழையாமை இயக்கம் மறைந்தது. 1924 ஆம் ஆண்டில் வைக்கம் சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஈ.வெ.ரா. ஈடுபட்டார். நாகம்மையாரும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். தமிழ்நாட்டிலிருந்து பல பெண்களையும் வைக்கத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போராட்டத்தில் கேரளப் பெண்களும் உற்சாகத்துடன் சேரும்படி செய்தார். தமது கணவர் கைதியான பிறகும், காங்கிரசின் உதவி கிடைப்பதற்கு முன்பும் தனித்து நின்று அப்போராட்டத்தை அஞ்சாமல் நடத்தினார்.**

*வைக்கத்தில் தமது வெற்றிக் கொடியைப் பல மாதங்கள் பறக்கும்படி செய்தார். அவர் சேனாதிபதியாக இருந்து வைக்கம் தெருக்களில் பெண்கள் படையை நடத்திச் சென்ற காட்சி சமூக ஊழியர்களைத் தட்டியெழுப்பியது. கொடிய சூரிய வெப்பத்திற்கும், பெருத்த மழைக்கும் பின் வாங்காமல் கோவில் வாசற்படி முன்பு அவர் நின்று சத்தியாக்கிரகம் செய்த காட்சி எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டது; அப்போரில் ஈடுபடும்படி செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்ச்சியை அதிகமாகக் கிளப்பி விட்டது. வைதீகர்களின் மனத்திலும் பெருந்திகிலை உண்டாக்கிற்று. இதுவரை உலகில் நடந்த சத்தியாக்கிரகங்களில் வெற்றி பெற்றது என்று சொல்லக்கூடியது வைக்கம் சத்தியாக்கிரகம் ஒன்றேயாகும். இவ்வெற்றிக்குக் காரணம் நமது அன்னையாரே.*

*"வீட்டின் ஒரு மூலையில் பேடெனப் பதுங்கிக் கிடந்த நம் அம்மையார் தீண்டாமை எனும் பேயை வெட்டி வீழ்த்துவான் வேண்டி வைக்கம் சத்தியாகிரகப் போரில் புகுந்து சிறை சென்று அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் அமையாது வாகைமாலையும் சூடினார்" என்று திரு.வி.க. முதலியார் அவர்கள் கூறியிருப்பது உண்மை! உண்மை!! உண்மை!!! அய்ரோப்பிய நாடுகளுக்கு அவரது துணைவர் பெரியார் சுற்றுப் பயணம் செய்தபோது இயக்கத்தையும், குடிஅரசு இதழையும் நிருவகிக்கும் அளவுக்குத் திறமை பெற்றார்.*

*தம் துணைவரோடு சிங்கப்பூர் சென்று திரும்பிய காலை அன்பின் மிகுதியால் தங்களுக்குப் பரிசு பொருள் என்ன வேண்டும் என்று அம்மக்கள் கேட்ட பொழுது நீங்கள் எல்லாம் இங்கு சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பி வருகிறீர்களே அந்த அன்பு போதும்! என்று சொல்லும் அளவுக்குப் பக்குவம்*

பெற்றார். அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் என்னும் நிலையை அடையும் அள வுக்கு பிரபலமானார். சுய மரியாதைத் திருமணங்களைத் தலைமை தாங்கி நடத்தும் அளவுக்கு முன் னேறினார். வீட்டுக்கு வருவோரை வரவேற்று விருந்தோம்புவ தில் அவர் ஒரு தாய். எந்த நேரத்தில் சென்றாலும் சூடாக எப்படி அந்த சுவை யான தோசை கிடைக் கிறதோ என்று ஆச்சாரியார் ஆயாசப்படும் அளவுக்குச் சிறந்தவர்.

எல்லாம் நன்மைக்கே எனதருமைத் துணைவி, ஆருயிர் காதலி நாகம்மாள் *11.05.1933*-ஆம் தேதி மாலை *7.45* மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப் படுவதா? மகிழ்ச்சி அடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு லாபமா? நஷ்டமா? என்பது இதுசமயம் முடிவுகட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.



எப்படி இருந்தாலும் நாகம்மாளை மணந்து வாழ்க்கைத் துணையாகக் கொண்டு *35* வருஷ காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்திற்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் மைனராய், காலியாய், சீமானாய் இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டு தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தாள் என்பது மறுக்க முடியாத காரியம். பெண்கள் சுதந்திர விசயமாகவும் பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ, போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடத்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால், நாகம்மாளோ பெண்ணடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாவும் சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றில் ஒன்றுக்கு பத்தாக நடத்துக்கொண்டிருந்தாள் என்பதையும் அதை நான் ஏற்றுக்கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன். நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவது ஒரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொது நல சேவையில் ஈடுபட்டபிறகு பொதுநல காரியங்களுக்கும் சிறப்பாக சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசில் இருக்கும்போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விஷயத் திலும், சு.ம.இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

**ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற் றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட் டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!**

**- தொடரும்**

# ‘ஹேக்கிங்’ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி

வங்கியில் இருந்து பேசுவதாகக் கூறி டெபிட், கிரெடிட் கார்டுகளின் தகவலை கேட்டு, வங்கி கணக்கில் இருக்கும் பணத்தை கொள்ளையடிக்கும் சம்பவங்கள் நடந்து வரும் நிலையில், தற்போது எந்த தகவலையுமே கேட்காமல், வங்கி கணக்கில் இருக்கும் பணத்தை கொள்ளையடிக்கும் நவீன தொழில்நுட்பத்தை கொள்ளையர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

சென்னை ராயப்பேட்டையைச் சேர்ந்தவர் சண்முகம். எச்டிஎஃப்சி வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார். ஆன்லைன் மூலம் வாங்கிய பொருளுக்கு வங்கி கணக்கில் இருந்து ரூ.10 ஆயிரம் எடுக்கப்பட்டிருப்பதாக அவரது செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்தவர், உடனடியாக வங்கியின் சேவை மையத்துக்கு தொடர்பு கொண்டு தனது கார்டை ‘பிளாக்’ செய்துள்ளார். பின்னர் வங்கி அதிகாரிகளிடம் சென்று முறையிட்டபோது, “ஆன்லைன்மூலம் செய்யப்பட்ட பணப் பரிமாற்றத்துக்கு முறைப்படி உங்களது செல்போன் எண்ணுக்கு ரகசிய குறியீட்டு எண் (ஓடிபி) அனுப்பப்பட்டுள்ளது.

அந்த ஓடிபியைப் பயன்படுத்திய பிறகே உங்கள் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நாங்கள் பொறுப்பாக முடியாது” என்று கூறியுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த சண்முகம் தனது செல்போனை பரிசோதனை செய்ய, அதில் ‘எம்ஐ பேயூ’ (mi payU) என்ற பெயரில் ஒரு செயலி பதிவிறக்கமாகி இருப்பதை பார்த்திருக்கிறார். அது ஒரு ஹேக்கர் செயலி என்பதையும், அதன் மூலம் செல்போனை ‘ஹேக்’ செய்து பணப்பரிமாற்றத்துக்கான ஓடிபியை ஹேக்கர்கள் தெரிந்து கொண்டதும் அவருக்கு தெரியவந்தது. உடனே அந்தச் செயலியை செல்போனில் இருந்து ‘அன்இன்ஸ்டால்’ செய்துள்ளார்.

பின்னர் தனது பெயரில் இருந்த 3 வங்கி கணக்குகளை பிளாக் செய்து விட்டு, அவசர தேவைக்காக இந்தியன் வங்கியில் உள்ள ஒரே ஒரு கணக்கை மட்டும் பிளாக் செய்யாமல் விட்டுள்ளார். 10 நாள் இடைவெளியில் இந்தியன் வங்கி கணக்கில் இருந்தும் தலா ரூ.10 ஆயிரம் வீதம் இரண்டு தவணைகளில் ரூ.20 ஆயிரம் ஆன்லைன் மூலம் திருடப்பட, அதிர்ச்சி அடைந்த சண்முகம் அந்த வங்கிக் கணக்கையும் பிளாக் செய்துள்ளார். பின்னர் தனது செல்போனை சோதனை செய்ய, ஏற்கெனவே ‘அன்இன்ஸ்டால்’ செய்த ‘எம்ஐ பேயூ’ என்ற செயலி மீண்டும் செல்போனில் பதிவிறக்கம் செய்யப்பட்டிருப்பதை பார்த்து, செல்போனையே ‘பேக்டரி டேட்டா ரீ செட்’ செய்திருக்கிறார்.

ஒரு நபர் வெவ்வேறு வங்கிகளில் வைத்திருக்கும் வங்கிக் கணக்கு விவரங்களை எப்படி எடுக்க முடிந்தது, அதை வைத்து எப்படி பணத்தை கொள்ளையடிக்கிறார்கள் என்பது குறித்து சைபர் கிரைம் போலீஸாரிடம் கேட்டபோது, “வங்கிகளின் நெட் பேங்கிங் பக்கத்தில் ‘யூபிஐ’ என்ற பிரிவு சமீப காலமாக



இருப்பதை நாம் பார்த்திருப்போம். அதாவது, ஒரு நபரின் பெயரில் இருக்கும் வெவ்வேறு வங்கி கணக்கு விவரங்கள் அனைத்தும் இந்த யூபிஐ அக்கவுண்டில் இணைக்கப்பட்டிருக்கும்.

ஒரு வங்கி கணக்கில் இருந்து மற்றொரு வங்கி கணக்குக்கு, எந்தவிதமான சேவைக்கட்டணமும் இன்றிபணத்தை உடனடியாக மாற்றுவதற்காக இந்த யூபிஐ அக்கவுண்ட் பயன்படுகிறது. இந்த யூபிஐ அக்கவுண்ட்டில் ஆதார் கார்டை இணைப்பது அவசியமாகும். சிக்கலே இங்கேதான் ஆரம்பிக்கிறது. வங்கி அதிகாரி பேசுவதாக கூறியும், டெபிட் - கிரெடிட் கார்டுகளின் விவரங்கள் மற்றும் ரகசிய குறியீட்டு எண்ணைத் தெரிந்து கொண்டு பணத்தைத்

திருடி வந்த கொள்ளையர்கள், தற்போது ஹேக்கிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கின்றனர்.

அனைத்து வங்கி கணக்குகளுடனும் ஆதார் எண்ணை இணைத்திருப்பதால், நமது ஆதார் எண் மூலம் யூபிஐ அக்கவுண்ட்டுக்குள் நுழையும் ஹேக்கர்கள், ஒரு நபரின் அனைத்து வங்கி கணக்கு விவரங்களையும் எடுத்து விடுகின்றனர். பின்னர், நமது செல்போனுக்கு குறுஞ்செய்தி அல்லது விளம்பரம் மூலம் ஹேக்கிங் செயலியைச் செலுத்தி, நமது செல்போனுக்கு வரும் ஓடிபி தகவல்களை அவர்களுக்கு வரும்படி செய்து, வங்கிக் கணக்கில் இருக்கும் பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர். தமிழகத்தில் கடந்த ஓர் ஆண்டில் மட்டும் இதுபோல 2,100 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் ஒரு நபரைக்கூட பிடிக்க முடியவில்லை.




கடிதம் கொடுத்து ஆதார் எண்ணை நீக்கச் சொல்ல வேண்டும்" என்றார்.

எக்ஸ்னோரா நிர்மல் கூறும்போது, "வரும்காலத்தில் ஆதார் தகவல்களைத் திருடித்தான் மிகப்பெரிய மோசடிகள் நடத்தப்படும் என்று

# வங்கி கணக்கில் பணத்தை திருடும் மோசடி கும்பல்!

வங்கிக் கணக்கில் இருந்து கொள்ளையடிக்கப்படும் பணம் கொள்ளையர்களின் வங்கி கணக்குகளுக்குத்தான் அனுப்பப்படும். பின்னர் அடுத்தடுத்து 4 அல்லது 6 வங்கி கணக்குக்கு அந்த பணம் மாற்றப்பட்டு, ஏதாவது ஒரு இடத்தில் பணத்தை எடுத்துவிடுவார்கள். அனைத்து வங்கி கணக்குகளும் போலி முகவரியால், அடையாளம் தெரியாத நபரால் தொடங்கப்பட்டிருக்கும். அந்த நபர்களைக் கண்டுபிடிப்பது சிரமம். தொடர் விசாரணை மற்றும் வெளிமாநிலங்களில் தங்கி தேடுதல் வேட்டை நடத்தினால் மோசடி நபர்களைப் பிடிக்க முடியும். ஆனால், அதற்கு அதிக பொருட்செலவு ஏற்படும் என்பதால் காவல் துறையினர் யாரும் அதை செய்வதில்லை" என்றனர்.

அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் டி.தாமஸ் ஃபிராங்கோ கூறும்போது, "வங்கி எண்ணுடன் ஆதார் எண்ணை இணைப்பது தேவையற்றது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள 27 வழக்குகளில் நானும் ஒரு வழக்கைப் பதிவு செய்து இருக்கிறேன். வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்திருப்பவர்கள், வங்கிக்கு

தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட அமெரிக்கா மற்றும் இந்தியாவின் ராணுவ இணையதளங்களையே ஹேக்கர்கள் முடக்கி விட்டனர். இணையதளம் முடக்கப்பட்டதால் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை 4 நாட்கள் வெளிவரவில்லை. இதையெல்லாம் செய்த ஹேக்கர்களுக்கு ஆதார் தகவல்களைத் திருடுவது சவாலாக இருக்காது. எனவே, ஆதாரை வங்கிக் கணக்குடன் இணைப்பது ஆபத்தானது" என்றார்.

சாதாரண தொழில்நுட்பங்களை மட்டும் வைத்துக் கொண்டு, தொழில்நுட்ப குற்றங்களைத் தடுக்கவும் முடியாது, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் முடியாது. ஹேக்கர்களைக் கண்டுபிடிக்க, ஹேக்கிங் தொழில்நுட்பம் தெரிந்த நபர்களை சைபர் கிரைம் பணியில் சேர்க்க வேண்டும். அவர்களை வைத்து மட்டுமே ஹேக்கர்களைப் பிடிக்க முடியும். வங்கிக் கணக்கில் இருக்கும் பணம் திருடுபோனால் அதற்கு வங்கியே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

**- வீ. சிவசங்கரன்**

# சாகாக் கலை எனப்படும் காயகல்பம்

நறுமனப் பொருள்களின் அரசன் என்ற போற்றப்படும் மிளகு உடலுக்கு நல்லதா? உடல் நலத்துக்கு மட்டுமல்ல, உள்ளத்திற்கும் நல்லது! மிளகில் சோர்வு அகற்றி இடையறாத ஊக்கம் தருகிற நறுஞ்சுவையும், நறுமணமும் உள்ள பொருட்கள் நீக்கமற நிறைந்துள்ளன. 100 கிராம் கறுப்பு மளிகல் புரதம் 11.2% கொழுப்பு 6.8% என்று உள்ளது. இதில் 300 கலோரி கிடைக்கிறது.

உணவில் தினமும் மிளகு இரசம் இடம் பெற்றாலே போதுமானது. இது தங்கபஸ்மத்திற்கு இணையானது. குழந்தைகள் மட்டுமல்ல, வாழ்வில் முன்சூனற முயற்சிப்பவர்களுக்குத் தேவையான சக்தியையும் வழங்கும். அதற்கு ஏற்ப கால்சியம, இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும், கரோட்டின் தயாமின், ரிபோபிளவின், ரியாசின் போன்ற வைட்டமின்களும் மிளகில் தாராளமாக உள்ளன. இவை அனைத்தும் நரம்புத்தளர்ச்சி, நரம்புக்கோளாறு முதலியவற்றை அகற்றி நரம்புக ளுக்கு ஊக்கம் தருகிறது. நரம்பு மண்டலம் துடிப்பாக இருந்தால் சிந்தனையும் அதைத்தொடர்ந்து செயது முடிக்கும் வேகமும் சீராகத் தொடரும்.

காய்ச்சலுடன் வயிற்று பொருமலையும் மிளகு தணிக்கிறது. ஜீரண உறுப்புகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுத் தொந்தரவில்லாமல் செயல்பட உதவுகிறது. காரசாரமான மிளகு உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. ஜீரணக் கோளறும் உடனே குணமாகிறது. உணவும் நன்கு செரிக்க ஆரம்பிக்கிறது. வீட்டில் எப்போதும் கறுப்பு மிளகுத் தூள் இருப்பது நல்லது. ஜீரணம் ஆகாத போதும், நிறையச்சாப்பிட பிறகும் கால் தேக்கரண்டி மிளகுத் தூளை மோரில் கலந்து குடித்தால் உடன் ஜீரணமாகும். இல்லையெனில் வெல்லக்கட்டியில் ஆறு மிளகை வைத்து அரைத்து அந்தப் பொடியை தண்ணீருடன் சாப்பிடலாம்.

ஜலதோஷத்துடன் கூடிய காய்ச்சலுக்கு இதே போல் ஆறு மிளகைத் தூள் செய்து தண்ணீருடன் சாப்பிடவும். கூடவே மைசூர் பாக், பாதுஷா



போன்ற வகைகளில் ஆறு துண்டுகள் சாப்பிடவும். இல்லையெனில் பாலில் மிளகுத்தூளைக் கொதிக்க வைத்து அருந்தலாம். தும்மல் மற்றும் சளியுடன் ஜலதோஷம் என்றால் இருபது கிராம் மிளகுத் தூளை பாலில் கொதிக்க வைத்து ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் சாப்பிடவும். இது ஒரு சூப்பர் நிவாரணி.

சோம்பலாகவும், அறவு மந்தமாகவும் இருப் பவர்களும், ஞாபக மறதிக் குழந்தைகளும் மற்ற வயதுக்காரர்களும் ஒரு தேக்கரண்டித் தேனில் ஒரு சிட்டிகை மிளகுத்தூளைக் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வரவும். மிளகில் உள்ள பாஸ்பரஸ் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். உடம்புவலி, பற்சொத்தை உள்ளவர்களும், மலட்டுத்தன்மையுள்ளவர்களும் மிளகை தினசரி உணவில் சேர்ப்பது நல்லது.

ஆண்மைக் குறைபாடு உள்ளவர்களும், பெண்மைக் குறைபாடு உள்ளவர்களும் தினமும் நான்கு பாதாம் பருப்புகளுடன் ஆறு மிளகையும் தூளாக்கி பாலுடன் இரவில் அருந்தி வருவது நல்லது. குறைபாடுகள் குணமாகும். குழந்தையும் பிறக்கும். பற்சொத்தை, பல்வலி, பேசும் போது நாற்றம், பல் கூச்சம் உள்ளவர்கள் சில நாட்களுக்கு மிளகுத் தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல்துலக்கி வரவும். மிளகு இரசமும், மிளகு சோந்த உணவு வகைகளும் ஆரோக்கியத்தைத் தருவதுடன் மூளையின் கூர்மையையும் அதிகரிக்கும் என்பது உறுதி.

Dr.K. ராஜமாணிக்கம்

நீடித்த இளமையோடும், நோயற்ற உடல் நலத்துடன் வாழ சித்தர்கள் பல கற்பவகைகளை அருளியிருக்கின்றனர். இவை யோக கற்பம், மருத்துவ கற்பம் என இரு வகையில் அடங்கியிருக்கிறது.

மிளகு கற்பம் பற்றி பார்ப்போம். இந்த தகவல் அகத்தியர் அருளிய "அகத்தியர் பரிபூரணம்" என்ற நூலில் இருந்து சேகரிக்கப் பட்டது. அந்த பாடல் பின்வருமாறு...

**கேளடா கற்பமொன்று சொல்வேன்மைந்தா**
**கிருபையுள்ள மாதுரதி யமுர்தந்தன்னை**
**கேளடா வாங்கியொரு கரகத்திட்டு**
**கெணிதமுடன் பருமிளகாய் யெடுத்துக்கொண்டு**
**கேளடா அமுர்தரசத் தேனில்நன்றாய்க்**
**கெட்டியுடன் சட்டமதா யூறவைத்து**
**கேளடா நீரறவே யூறிற்றானால்**
**கேள்வியென்ன அந்திசந்தி ஐந்துகொள்ளே.**

**கொள்ளையிலே கபமகலும் வாசியேறும்**
**குருவான பதிதனிலே தீபங்காணும்**
**சுள்ளையிலே யகப்பட்ட பாண்டம்போலே**
**சோர்வான தத்துவங்கள் சுத்தமாகும்**
**பிள்ளையிலே உங்களைப்போல்**
**பிள்ளையுண்டோ**
**பிலமான அமுர்தரசங் கொண்டதாலே**
**உள்ளெழுந்த மந்திரத்தின் சித்தியாலே**
**உத்தமனே சக்கரம்நின் றாடும்பாரே.**

நல்ல பெரிய மிளகாக பார்த்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனை ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொள்ள வேண்டுமாம். அந்த மிளகு மூழ்கும் வரை தேனை ஊற்றி, அந்த பாத்திரத்தை





மூடி ஒன்றினால் மூடி விட வேண்டும். மிளகானது தேனை முழுவதுமாக உறிஞ்சி, பாத்திரத்தில் தேன் வற்றிப் போன நிலையில் அந்த மிளகை எடுத்து பத்துப் பங்காகப் பிரித்துக் கொள்ள வேண்டுமாம். இதனை அந்தி சந்தி வேளைகளில் ஒவ்வொரு பங்காக ஐந்து நாட்கள் தொடர்ந்து உண்ண வேண்டும் என்கிறார்.

இவ்வாறு ஐந்து நாட்கள் உண்டால், கபம் நீங்கி வாசி மேல் நோக்கி ஏறுவதுடன் புருவமத்தியில் ஒளி தென்படுமாம். அத்துடன் சூளையில் சுட்ட மண் பாண்டம் போல் நமது உடல் சுத்தியடைந்து உறுதியாகும் என்கிறார் அகத்தியர். இந்த கற்பத்திற்கு பத்தியங்கள் எதுவும் சொல்லப்படவில்லை.

பொதுவான கற்ப விதிகளுடன், முதல் நாள் ஐந்து மிளகு சாப்பிடத் தொடங்கி, ஒவ்வொரு நாளும் ஐந்து மிளகு கூட்டி அமுரியில் கலந்து 100 மிளகு ஆகும் வரை கலையில் சாப்பிட வேண்டும். பிறகு ஒவ்வொரு நாளும் 5 மிளகு குறைத்து 20 நாட்களுக்கு காலையில் சாப்பிட வேண்டும். அத்துடன் மாலையில் அருகம்வேர் 35 கிராம்,25 மிளகை சேர்த்து இடித்து தண்ணீரில் கரைத்து சிறிது வெண்ணை சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

அமுரி என்பது சிறுநீர், பனிநீர், இளநீர், பழைய சோற்றின் நீர், எலுமிச்சம் பழச்சாறு என்று பலவகையாகச் சொல்லப்பட்டாலும், பொதுவாக மெத்தன் வாழை மரத்தில் துருசுச் சுண்ணம் என்ற மருந்தை வைக்க அதனால் அடித்தண்டில் வடியும் நீர்தான் அமுரி என்பபடுகிறது. இருந்தாலும், எலுமிச்சம் பழச்சாறு, பழைய சோற்றின் நீரும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

**- தொடரும்**

# தண்ணீர் பஞ்சம் விழிப்புணர்வு இல்லாததுதான் காரணம்!

இந்தியாவில் ஏறக்குறைய நூறு கோடி பேர் ஆண்டின் ஒரு பகுதியிலேனும் தண்ணீர்ப் பற்றாக்குறையோடுதான் வாழ்ந்துவருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட 17 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று தமிழ்நாடு அரசு அறிவித்துவிட்டது. ‘தண்ணீர்ப் பிரச்சினையை இந்தியா மட்டும் அல்ல; உலகம் முழுவதுமே தண்ணீர்ப் பற்றாக்குறையின் விளிம்பில் தான் நின்றுகொண்டிருக்கிறது’ என்கிறது ‘வாட்டர்எய்டு இந்தியா’ அமைப்பின் 2019-ம் ஆண்டுக் கான அறிக்கை. உலகம் முழுவதும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் அரசுசாரா அமைப்பு இது.



உலகம் முழுவதும் 400 கோடி மக்களுக்கும் மேலாகத் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் வசித்துவருகிறார்கள். 84.4 கோடி மக்கள் தங்களது வீடுகளின் அருகே சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றிருக்கவில்லை. உலகளவில் 100 ஆண்டுகளுக்கு முன்பு நாம் பயன்படுத்தியதைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகமாகத் தண்ணீரைப் பயன்படுத்திவருகிறோம். ஆனால், தண்ணீரைப் பாதுகாப்பதற்கான அமைப்பை இன்னும்கூட நாம் உருவாக்கவில்லை.

‘தரையின் அடியில்: உலகளாவிய தண்ணீர் நிலவரம்’ என்ற தலைப்பிலான இந்த அறிக்கை, தண்ணீர்ப் பற்றாக்குறையோடு அதிக மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் நாடுகள்; மித மிஞ்சி அதிகரித்துவரும் பயன்பாட்டுத் தேவை களானது வறுமைநிலையில் வாழ்பவர்களும் பெருமளவிலானவிளிம்புநிலைமக்களும்தண்ணீர் பெறுவதை எப்படியெல்லாம் பாதிப்புக்குள் ளாக்கியிருக்கிறது; உலகின் எந்த மூலையில் நீங்கள் இருந்தாலும் அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்துத் தண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நோக்கில் அறிவார்ந்த மாற்று முறைகளை எப்படி உருவாக் குவது ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

எந்தவொரு கணத்திலும் இந்தப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும், தண்ணீரைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது எப்படி என்றும் அடிக்கடி நாம் எச்சரிக்கப்பட்டுவருகிறோம். ஆனாலும், அதன் பாதிப்பு நம்மைத் தாக்காத வரைக்கும் அது குறித்து அலட்சியம் காட்டியே வருகிறோம். சென்னையில் இன்று எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வேகமாக ஒரு நடை போய்வாருங்கள். ஒவ்வொரு மூன்றாவது வீட்டிலும் ஆழ்துளைக் கிணறு தோண்டப்படுவதைப் பார்ப்பீர்கள்.

நீர்மட்டம் நாளுக்கு நாள் கீழிறங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால், நீருக்கான வேட்டை

மட்டுமே தொடங்கியிருக்கிறது. இந்தியாவில் 75% வீடுகள் தங்கள் குடியிருப்புப் பகுதியிலேயே குடிநீர் வசதியைக் கொண்டிருக்கவில்லை. 70% குடிநீர் சுத்தமானதாக இல்லை.

60 கோடி இந்தியர்கள் தீவிரமான தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டிருக்கிறார்கள் என்றும், பாதுகாப்பான குடிநீர் போதுமான அளவில் இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பேர் இறக்கிறார்கள் என்றும் நிதி ஆயோக்கின் 2018 அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. இதுவும்கூட போதுமான எச்சரிக்கை மணி இல்லையென்று எண்ணினால், அதே அறிக்கை மேலும் கூறுவதையும் கவனிக்க வேண்டும். இந்தியாவில் உள்ள 70% குடிநீர் சுத்தமானதல்ல. 122 நாடுகளுக்கு இடையிலான தண்ணீர் தரக் குறியீடுகளில், நாம் 120-வது இடத்தில் இருக்கிறோம்.



‘2030 ஆண்டுவாக்கில், இந்தியாவின் தண்ணீர்த் தேவை தற்போது விநியோகிக்கப்படுவதைக் காட்டிலும் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று கணிக்கப்படுகிறது. மேலும், பல லட்சம் மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவார்கள் என்பதையே இது உணர்த்துகிறது. இதன் விளைவாக, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% இழப்பு ஏற்படும்’ என்கிறது நிதி ஆயோக்கின் அறிக்கை.

பாதுகாப்பான, சுத்தமான குடிநீர் என்பது மனித உரிமைகளில் ஒன்று. மதிப்புக்குரிய நீர்வளத்தைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் உதவ முடியும் என்று சில ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில: தண்ணீர் கசியும் குழாய்களை மாற்றும் வேலைகளை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும்; தண்ணீர் கசியும் ஒரு குழாயில் நாளொன்றுக்கு 20 லிட்டர் தண்ணீர் வீணாகிறது. வீட்டிலும் அலுவலகத்திலும் மழைநீர்ச் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். சமையலறையில் பயன்படுத்திய நீரையும் தரையைத் துடைக்கப் பயன்படுத்திய நீரையும் தோட்டத்துக்கு மறுபடியும் பயன்படுத்த வேண்டும். மிகவும் குறைவான தண்ணீர் தேவைப்படும் கழிப்பறை அமைப்புகளையும் குளியலறை அமைப்புகளையும் உருவாக்க வேண்டும். குறைவான தண்ணீர் தேவைப்படும் சலவை இயந்திரங்களையே பயன்படுத்த வேண்டும்.

தண்ணீரில் வளரும் செடிகளுக்குக் காலையில் நீர் ஊற்றும்போது கொஞ்சம் குறைவாகவே ஊற்றுங்கள். உணவுகளை வீணாக்க வேண்டாம். ஒரு பழத்தின் பாதியை எறிந்துவிட்டு இன்னொரு பழத்தை வாங்கப்போகிறீர்கள் என்றால் 500 லிட்டர் தண்ணீரை நீங்கள் வீணடிக்கிறீர்கள் என்று அர்த்தம். இவையெல்லாம் ‘வாட்டர்எய்டு இந்தியா’ அமைப்பின் பரிந்துரைகள். இவற்றோடு மேலும் ஒன்றையும் சேர்த்துக்கொள்ளலாம். அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் 90 கோடி ஜீன்ஸ் ஆடைகள் விற்கப்படுகின்றன. இந்த ஆடைகளைத் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 360 கோடி லிட்டர் தண்ணீர் செலவழிக்கப்படுகிறது. ஒவ்வொரு அமெரிக்கரும் ஏற்கெனவே ஏழு ஜோடி ஜீன்ஸ் ஆடைகள் வைத்திருக்கிறார்கள். அமெரிக்க உதாரணம் நமக்கும் பொருந்தும். நீங்கள் கடைக்குச் செல்வதற்கு முன்னால் கொஞ்சம் யோசியுங்கள். மேலும் மேலும் ஆடைகள் வாங்கிக் குவிப்பதையும்கூடக் குறைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர்ப் பாதுகாப்புக் கொள்கையைப் பின்பற்றுகிற, அதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கிற நிறுவனங்களிடமிருந்தே ஆடைகள் வாங்க வேண்டும்.


**- அகிலாண்டேஸ்வரி**



# சிந்தனை முத்துக்கள்




நானும் டிகிரி படிச்சு ஏழை மக்கள காப்பத்தனும்னு தான் நினைச்சேன்..
படிச்சதுக்கு அப்பறம் தான் தெரிஞ்சு என்னையே காப்பாத்திக்கரதே கஷ்டம்னு..


No comments


No comments...


தன் கடின உழைப்பில் முன்னேறுபவர்களுக்கு மட்டுமே தெரியும்...
வாழ்வின் ஒவ்வொரு நகர்வும் இதுபோன்றது என்று...!


வழிப்பறி
1918
டிஜிட்டல் வழிப்பறி
2018


டெலிபோன் வந்தா ஓடிபோய் பேசனுமேனு உக்காந்து இடத்துல பேச கண்டுபிடிச்சது தான் செல்போன்...
ஆனா இப்ப போன் வந்தாலே எடுத்துட்டு வெளிய ஓடுறாய்ங்க...


CALENDAR ராசி பலன்
தோல்வி, துன்பம், செலவு, அலைச்சல் னு போட்டு இருந்தா எல்லாம் நடக்குது.
அதே வெற்றி, மகிழ்ச்சி, ஆதாயம், ஜெயம் அப்படி போட்டு இருந்தா ஒன்னு கூட நடக்க மாட்டுது.


வெயிலின் தாா(க்)கம்


ஒரிஜினல் எழுமிச்சம் பழத்தை கார் டயரில் வைத்து நசுக்கி விட்டு
கெமிக்கல் எழுமிச்சை ஜூஸை குடித்து மகிழ்கிறோம்..
















சோம்பல் உன்னை
ஏமாற்றாமல்
காத்துக்கொள்.
ஏனெனில் அதற்கு
இன்று ஒருநாளைக்
கொடுத்தால் ,
அது அடுத்த நாளையும்
திருடிக்கொள்ளும்.




கண்ணுக்கு தெரிந்த
மனிதரை
மதிக்காவிட்டால்...
கண்ணுக்கு தெரியாத
கடவுளை
மதித்தும் பயன் இல்லை...



# இளைஞர்களின் எதிர்காலத்தை திசைமாற்றும் 'டிக் டாக்'

அறிவியல் வளர்ச்சி நமக்கு தந்த கொடைகளுள் பல, திசைமாறி, எய்தவரையே பதம் பார்த்த உதாரணங்கள் நிறைய நமக்கு உண்டு. சமீபத்திய உதாரணம் - டிக் டாக். பார்த்தால் பரம சாதுவாக, சேர்ந்தாற்போல நாலு வார்த்தை பேசத் தயங்குகிற நம்மூர் இளைஞர்களும், யுவதிகளும், டிக் டாக் செயலியில் பதிவேற்றி, அரங்கேற்றுகிற ஆட்டம், மெய்யாகவே மெய்சிலிர்க்கச் செய்கிறது. திரையில் வருகிற நிஜ கலைஞர்களையே சமயத்தில் மிஞ்சுகிற அளவுக்கு முக பாவனைகளும், உடல் அசைவுகளும் சபாஷ் தான். எல்லை மீறுகிற போதுதான் பிரச்னை.

*2016*, செப்டம்பரில், சீனாவில் அறிமுகமாகி தற்போது உலகம் முழுவதும் 75 மொழிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் டிக் டாக் செயலி சபாஷ்களை விடவும், சர்ச்சைகளையே அதிகம் கொண்டு வந்து சேர்க்கிறது. அதிகரிக்கும் பாலியல் வன்முறைகள், சமூகச் சிக்கல்கள், இளைஞர்களின் திசைமாறல் சம்பவங்களுக்கு இந்தச் செயலியும் ஒரு காரணமாக அமைவதாக குற்றச்சாட்டுகள் அதிகரித்தன. சமூக ஆர்வலர்களின் தொடர் வற்புறுத்தல்களையடுத்து, இந்தச் செயலியை தடை செய்யவேண்டும் என மத்திய அரசுக்கு கடந்த பிப்ரவரியில் தமிழக அரசு பரிந்துரைத்தது. இளைஞர்களை தவறான வழிக்குக் கொண்டு செல்லும் இந்தச் செயலியை தடைசெய்யக் கோரி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சமூக ஆர்வலர்கள் வழக்குத் தொடர்ந்தனர். இணையத்தில், குழந்தைகளின் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமெரிக்கா மற்றும் இந்தோனேசியாவில்



இந்தச் செயலி தடை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலும் தடைசெய்ய உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் என்.கிருபாகரன், எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோர், ‘‘ப்ளூவேல் போன்ற ஆபத்தான விளையாட்டுகளை நீதிமன்றம் தலையிட்ட பின்னரே மத்திய அரசு தடை செய்தது. அதுபோல, சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் நீதிமன்றமே தடை விதிக்கவேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது. அரசே முன்வந்து உரிய நடவடிக்கை எடுக்க முயலவேண்டும். டிக் டாக் செயலியை தடை செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்’’ என உத்தரவிட்டனர். இந்த உத்தரவை எதிர்த்து, டிக் டாக் செயலியை உருவாக்கிய சீனாவின் ‘பைட் டான்ஸ் (Byte Dance)’ நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. ‘‘எங்கள் தரப்பு வாதத்தைக் கேட்காமலேயே, சென்னை உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது’’ என்று மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் அமர்வு, உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தடையை நீக்க திட்டவட்டமாக மறுத்து விட்டது. உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு, வளர்ந்து வரும் இந்தியாவின் இளம் தலைமுறையினர் மீது அது கொண்ட அக்கறையின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தை கட்டமைக்கும் இளைஞர்களின் நிகழ்காலம், திசைமாறி விடாமல் பாதுகாக்கும் கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்ற கருத்தை வலியுறுத்துவதாகவும் இருக்கிறது!

- A.D. ராஜேந்திரன்


# நிருபர்கள் தேவை

பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை ✷ அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# ஏழைகளை வறுமையிலிருந்து மீட்டெடுக்க முடியுமா?

வறுமையை ஒழிப்பது என்ற சிந்தனையைத் தேர்தல் களத்துக்கு இந்திரா கொண்டுவந்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டாகிறது. ‘வறுமையே வெளியேறு’ (கரீபி ஹட்டாவ்) என்று அவர் முழங்கினார். இதை நிறைவேற்றும் வகையில் நாட்டைச் சிறிது காலம் வழிநடத்தினார். அவரது ஆட்சிக் காலத்தில் வறுமை வெளியேறிவிடவில்லை என்றாலும், வறுமையைக் குறைக்கும் நடவடிக்கைகள் 1960-களின் இறுதியில் தொடங்கின. 1980-களின் தொடக்கத்தில் மீண்டும் அவருடைய தலைமையிலான ஆட்சியின் கீழ், அந்த நடவடிக்கைகள் வேகம் பெற்றன. இந்திரா செயல்படத் தெரிந்த அரசியல் தலைவர் என்பதால், வருவாயைப் பெருக்குவதுதான் வறுமையை ஒழிக்கும் வழி என்று புரிந்துகொண்டு அதற்கான செயல்களிலும் இறங்கினார்.

2019 மக்களவைத் தேர்தலையொட்டி ஏழைகளின் வருவாயைப் பெருக்கும் திட்டங்கள் பாஜக, காங்கிரஸ் இரு கட்சிகளாலும் அறிவிக்கப்பட்டுள்ளன. ‘பிரதான் மந்திரி கிஸான் சம்மான் நிதி’ (பிஎம்-கிஸான்) என்ற பாஜகவின் திட்டம் விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 உதவித்தொகை தருவதை இலக்காகக் கொண்டது. இது ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

நாட்டு மக்களில் ஏதேனும் ஒரு பிரிவினருக்கு மட்டும் வருவாய் உதவித் திட்டம் என்பது சமத்துவ அணுகுமுறைக்கு எதிரானது என்ற அடிப்படையில் இது விமர்சிக்கப்பட்டது. விவசாயக் கூலிகளைப் போலவே நகரங்களில் நடைமேடைகளில் வசிக்கும் ஏழைகளும் தினக்கூலிகளும்கூட இத்தகைய உதவித்



திட்டத்துக்குத் தகுதியானவர்கள்; மேலும், விவசாயத்துக்குத் தரும் மானியங்கள் விவசாயிகளுக்குத்தான் செல்கின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், அனைவருக்கும் நியாய விலையில் உணவு கிடைக்கவும், உணவுக்காக வெளிநாடுகளிடம் கையேந்தாமல் இருக்கவும் இத்தகைய மானியங்கள் அவசியம் என்பது நல்ல பதில். அதேசமயம், எந்தவொரு சமூக நலத் திட்டமும், சமமான பொருளாதார நிலையில் இருப்பவர்களில் ஒரு சாராரை ஒதுக்கிவிட்டு இன்னொருவருக்கு மட்டும் பலன் தரும் வகையில் செயல்படுத்தப்படுவது சரியல்ல.



காங்கிரஸ் அறிவித்துள்ள 'நியாய்' திட்டம் பாஜக திட்டத்தைவிடப் பெரிது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழைகளில் 20% பேருக்கு மாதந்தோறும் ரூ.6,000 வீதம் 12 மாதங்களுக்கு ரூ.72,000 வழங்கும் உத்தேசத்தைக் கொண்டது இத்திட்டம். இரண்டு திட்டங்களும் மக்கள் முன் இருக்கின்றன. 'நியாய்' திட்டம் மேலும் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் ஒருவருக்கு அளித்துவிட்டு இன்னொருவருக்கு இல்லை என்று பாரபட்சம் காட்டவில்லை என்பதை இங்கே சுட்ட வேண்டியிருக்கிறது. இப்போதைய விலைவாசிப்படி இத்திட்டத்தை அமல்படுத்த அரசுக்கு ஆண்டுக்கு ரூ.3.6 லட்சம் கோடி செலவு பிடிக்கும். மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் 2019-20-ல் அரசு ஒதுக்கியுள்ள செலவில் 13% இந்தத் தொகை. மத்திய அரசு நிர்வகிக்கும் அனைத்துத் திட்டங்களையும் நிறுத்திவிட்டு, இதர துறைகளுக்கான மானியத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தினால் இந்தத் தொகையை அரசால் ஒதுக்கிவிட முடியும்.

ஆனால், இந்த 13% தொகையானது கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கும் மூலதனச் செலவுக்கும் அரசு ஒதுக்கியிருக்கும் தொகையைப் போல இரண்டு மடங்கு. ஆனால், இந்தத் தொகையையும் தொடர்ந்து இத்துறைகளுக்குச் செலவிட்டால்தான் வறுமையைக் கட்டுக்குள் வைக்க முடியும். ரூ.3.6 லட்சம் கோடியை வறுமை ஒழிப்புக்கு நேரடியாகத் தருவதைப் போல, அரசே வேறு சமூக நல அடித்தளக் கட்டமைப்புகளுக்கும் செலவிட்டுப் பலனைக் கூட்டலாம் என்பதையும் இங்கே சொல்ல வேண்டும்.

இந்த விஷயத்தில் தென்னிந்திய மாநிலங்களை அரசு ஒரு முன்னோடியாகக் கருதலாம். சுகாதாரம், கல்வி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், பொது விநியோக முறை மூலம் மானிய விலையில் அத்தியாவசியப் பண்டங்களை அளிப்பது போன்ற பொதுச் சேவைகள் மக்களுடைய வறுமையை ஒட்டுமொத்தமாகக் குறைப்பதை உணர்த்தும் சான்றுகள் நிறைய இருக்கின்றன. நேரடியான வறுமை ஒழிப்புத் திட்டங்களைவிட இவை நல்ல பலன்களையும் அளிக்கின்றன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் நபர்வாரி வருவாயும் நபர்வாரி ஏழ்மையும் ஒரே அளவில் இல்லை. வடக்கு, கிழக்கு, மத்திய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தென்னிந்திய மாநிலங்களில் வறுமையின் அளவும் வறியவர் எண்ணிக்கையும் குறைவு. இதற்கு முதல் காரணம் மனிதவள ஆற்றல் மேம்பாட்டுக்குத் தென்னிந்திய மாநிலங்கள் செய்த செலவுகள்தான்.

தென்னிந்தியர்களின் கல்வியறிவு, சுகாதார நிலை, நபர்வாரி வருவாய் ஆகியவற்றைப் பிற பகுதி இந்தியர்களுடன் ஒப்பிடும்போது, வருமானம் அதிகரித்தால் வறுமை குறையும் என்ற உண்மை புலப்படுகிறது.

- S. மோகன்

# உடையாளூரில் இருப்பது ராஜராஜசோழன் சமாதியா?

## தொல்லியல் துறை ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உடையாளூரில் இருப்பது மாமன்னன் ராஜராஜ சோழன் சமாதியா என்பதை கண்டறிவதற்கான ஆய்வுப் பணியை தமிழக தொல்லியல் துறையினர் தொடங்கினர். கி.பி.11-ம் நூற்றாண்டில் பழையாறை, சோழர்களின் தலைநகரமாக இருந்தபோது, ராஜராஜ சோழன் தங்கியிருந்த இடம்தான் இன்று சோழன்மாளிகை எனவும், சோழப் பேரரசின் படைகள் இருந்த இடங்களே இன்றைய ஆரியப்படையூர், பம்பப்படையூர்,



புதுப்படையூர், மனப்படையூர் எனவும் கருதப்படுகிறது. ராஜராஜ சோழன் தனது வாழ்நாளின் இறுதிக்காலத்தை உடையாளூர் பகுதியில் கழித்த போது அவர் இறந்துள்ளார். அதன்பின் அவருடைய உடலை உடையாளூரிலேயே அடக்கம் செய்துள்ளனர்.

திருக்கோயிலூரில் பிறந்த ராஜராஜ சோழன் கி.பி.985-ம் ஆண்டு சோழப் பேரரசனாக முடி சூட்டிக் கொண்டு தென்னிந்தியா முழுவதும் தனது பேரரசைப் பரப்பினார். தென்னிந்தியாவில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் பல சிற்றரசர்களை வெற்றி பெற்று வந்தார். அப்போது, தன்னுடைய வாழ் நாளில் ஏதாவது சாதிக்க வேண்டும் எனக் கருதிய ராஜராஜன் தன்னுடைய தெய்வபக்தியையும், கலையை நேசிக்கும் விதத்தையும் வெளிப்படுத்தும் வகையில் தஞ்சாவூர் பெரிய கோயிலை கி.பி.1010-ம் ஆண்டில் கட்டி முடித்தார். பின்னர் கி.பி.1012-ம் ஆண்டில் ராஜராஜ சோழன் தனது பட்டத்தைத் துறந்து, தன் மகன் ராஜேந்திர சோழனுக்கு முடிசூட்டினார்.

பின்னர் மகனது ஆட்சிக் காலத்தில் தனது வாழ்நாளை பழையாறையில் கழித்ததாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அப்போது, கி.பி.1014-ல் ராஜராஜ சோழன் காலமானார். பின்னர் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தன் மூதாதையர்கள் மீது சோழர்கள் போர் தொடுத்ததை எண்ணிப், பழிவாங்கும் நோக்கத்தில் சோழப் பேரரசு மீது போர் தொடுத்து பழையாறை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை அழித்தான். அதில் எஞ்சிய இடங்களில் ஒன்றான உடையாளூர் பால்குளத்தம்மன் கோயிலில் இன்றும் ராஜராஜன் நிறுவிய கல்வெட்டு ஒன்று ஆதாரமாக உள்ளது.



உடையாளூர் கிராமத்தில் ராஜராஜ சோழனின் சமாதி இருப்பதாக கல்வெட்டு ஆய்வாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக தெரிவித்து வருகின்றனர். ராஜராஜ சோழனின் சமாதி இருப்பதாகக் கூறப்படும் ஒட்டத்தோப்பு என்ற இடத்தில் புதையுண்ட சிவலிங்கத்தின் மூன்றடி அளவிலான பகுதி மட்டும் வெளியே தெரியும் நிலையில் உள்ளது. இந்த இடத்தில் ஆண்டுதோறும் ராஜராஜ சோழனின் சதய

திருவிழாவின்போது உடையாளூர் கிராம மக்களும், வரலாற்று ஆய்வாளர்களும் பூஜை செய்து வருகின்றனர்.

ஆயிரம் படைகளை வைத்து தென்னிந்தியா மட்டுமின்றி இலங்கை, லட்சத்தீவு, மாலத்தீவு உள்ளிட்ட ஏராளமான அயல்நாடு களையும் பிடித்து, உலகத்தை முதன் முதலாக ஆட்சி செய்த தமிழன் என்ற பெருமையைப் பெற்றவர் ராஜராஜ சோழன். அவருடைய சமாதி இருப்பதாகக் கூறப்படும் இடத்தை அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும் என வரலாற்று ஆய்வாளர்களும், தமிழ் அறிஞர்களும், உடையாளூர் பகுதி மக்களும் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.



இதற்கிடையில் ராமநாதபுரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திருமுருகன் என்பவர் உயர் நீதிமன்ற கிளையில் பொதுநல வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். அதில், மகாராஷ்டிராவில் சிவாஜி சிலையும், குஜராத்தில் சர்தார் வல்லபாய் படேல் சிலையும் பல கோடி ரூபாய் செலவில் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தென்னிந்தியா முழுவதும் ஆட்சி புரிந்து, பல நாடுகளையும் வென்ற ராஜராஜ சோழனின் சமாதி இருப்பதாகக் கூறப்படும் உடையாளூரில் தொல்லியல் துறையினர் இதுவரை ஆய்வு எதுவும் செய்யவில்லை. எனவே, தொல்லியல் துறையினர் அங்கு ஆய்வு செய்து, அரசு சார்பில் மணிமண்டபமும், இந்தியப் பெருங்கடல் அல்லது வங்காள விரிகுடா ஆகிய இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ராஜராஜனின் உயரமான சிலையையும் அமைக்க வேண்டும் எனக்கோரி மனு தாக்கல் செய்தார்.




இந்த மனுவை கடந்த ஏப்.11-ம் தேதி விசாரித்த நீதிபதிகள் என்.கிருபாகரன், எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோர், உடையாளூரில் ராஜராஜ சோழன் சமாதி இருப்பது உண்மையா என நவீன முறையில் அகழ்வாராய்ச்சி செய்து அதன் அறிக்கையை 6 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர். இதையடுத்து, தமிழக தொல்லியல் துறை துணை இயக்குநர் ஆர்.சிவானந்தம், தொல்லியல் துறை அலுவலர்கள் தங்கதுரை, ஜெ.பாஸ்கர், கல்வெட்டு ஆய்வாளர்கள் லோகநாதன், சக்திவேல், பேராசிரியர் ரமேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் உடையாளூரில் ராஜராஜ சோழன் சமாதி இருப்பதாகக் கூறப்படும் பகுதியில் 10 ஏக்கர் பரப்பளவில் ஆய்வுப் பணியை தொடங்கினர்.

அப்போது, ஹெலிகேமில் (ஆளில்லா குட்டி விமானத்தில்) நவீன கேமராக்களை பொருத்தி பூமியின் மேற்பரப்பு மற்றும் பூமிக்கடியில் 2 மீட்டர் ஆழத்தில் நீரோட்டம், பழமையான கட்டிடங்களின் தன்மை, தற்போதைய கட்டிடங்கள் ஆகியவற்றைப் படம் பிடித்ததுடன், அதன் கோணங்களையும் கணினி மூலம் பதிவு செய்து வருகின்றனர். மேலும் உடையாளூரில் பால்குளத்து அம்மன் கோயில், கைலாசநாதர் கோயில் உள்ளிட்ட பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இந்த ஆய்வு குறித்த அறிக்கை தமிழக தொல்லியல் துறை ஆணையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் என கள ஆய்வில் ஈடுபட்டுள்ள தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

- S. சரவணன்

# கல்வி உரிமை சட்டமும் கட்டாயக் கல்வியும்

எழுத்து, இலக்கணம், பாடநூல், பாட ஆசிரியர் என அனைத்தும் தாய்மொழியில் உள்ளன. ஆனால், சட்டம் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தவில்லை. அரசுப் பள்ளியில் 1-ம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வி வந்த நிலையில், இன்றைக்கு எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகளும் ஆங்கிலவழிக்குள் கொண்டுவரப்பட்டு விட்டன. தனியார் பள்ளிகளை ஊக்கப்படுத்துவது, அரசுப் பள்ளிகளைப் பலவீனப்படுத்துவது போன்ற செயல்களைத்தான் இந்தச் சட்டம் செய்கிறது. அரசு முதன்மைச் செயலரின் குழந்தைகளும் பேரன் பேத்திகளும் எங்கே படிக்கிறார்கள்? இவர்கள் அரசுப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்காதபோது, மக்கள் மட்டும் எப்படிச் சேர்ப்பார்கள்?

6-14 வயதுள்ள குழந்தைகளை அரசு அல்லது தனியார் பள்ளிகளில் சேர்த்தால் மட்டும் போதும், என்பதாகக் கல்வி உரிமைச் சட்டம் நீர்த்துப்போய்விட்டதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். குறைந்தபட்சம் 25 சதவீதத்தினரைத் தனியார் பள்ளிகளில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வழிவகுத்து, அதன்மூலமாக அரசுப் பள்ளிகளை மெல்ல வலுவிழக்கச் செய்து, மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் குறைத்து அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத்தான், இந்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. இவ்வாறான ஒரு சட்டத்தைக் கல்வி உரிமைச் சட்டம் என அங்கீகரிக்க முடியுமா?

உலகில் பல நாடுகள், ஒரு நூறாண்டுக்கு முன்பே கல்வி ஓர் அடிப்படை உரிமை என்ற சட்டத்தை இயற்றிவிட்டன. ஆனால், விடுதலை பெற்று அறுபதாண்டுகளுக்குப் பிறகுதான் நாம் இயற்றினோம். சட்டம் இயற்றப்பட்ட பிறகும் 6 முதல் 14 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கிடைக்கவில்லை. கறுப்புப் பணம் உருவா கும் முதன்மையான துறைகளில் ஒன்றாகக் கல்வித் துறையும் உள்ளது. கல்வித் துறைக்குத் துணைத்தீர்வை வசூலிக்கப்படும் நிலையில் தரமான, சமமான கல்வியைக் கட்டணமில்லாமல் கிடைக்கச் சட்டம் வழிவகை செய்யவில்லை.

கட்டணமில்லாக் கல்வி வழங்கும் அரசுப் பள்ளிகளில் வகுப்புக்கு ஒரு ஆசிரியர், பாடத்துக்கு ஒரு ஆசிரியர், உடற்கல்வி, கலைக் கல்வி, தொழிற்கல்வி போன்ற கல்வி இணைச் செயல்பாடுகளுக்குத் தனித்தனி ஆசிரியர்கள் இல்லை. அரசுப் பள்ளிகளில் இதுபோன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் கல்வி உரிமைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

இதைச் செய்யாமல், எட்டாம் வகுப்புவரை கட்டாயத் தேர்ச்சியை மட்டும் மறுப்பதன் மூலம் கல்வித் தரத்தை நிலைநாட்டிவிட முடியும் என்பது கபட நாடகம். தனியார் நிர்வகிக்கும் அரசு உதவிப் பள்ளிகள், கல்லூரிகள் ஏற்கெனவே தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. அவை இலவசக் கல்வி வழங்கும் பொதுக் கல்வி நிறுவனங்களாகச் செயல்படுகின்றன. இவற்றை முன்மாதிரியாகக்கொண்டு அனைத்துத் தனியார் சுயநிதிப் பள்ளிகளையும் அரசு உதவி பெறும் பொதுப் பள்ளிகளாக மாற்றும் வகையில் கல்வி உரிமைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.



அருகமைப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும் வகையில் சேர்க்கைக்கு வரையறை வேண்டும். கல்வி உரிமைச் சட்டம் 25 சதவீத ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்கும் ஏற்பாட்டுக்காக, தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கு நிதி அளிக்க வகை செய்கிறது. இதற்குப் பதிலாகத் தமிழ்நாட்டில் ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் தனியார் நிர்வகிக்கும் அரசு உதவிபெறும் பள்ளிகளைப் போலத் தனியார் சுயநிதிப் பள்ளிகளை மாற்றினால் மட்டுமே அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி கிடைக்கும்.

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு பள்ளிப் பருவத்தில் இருக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயமாகக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற இலக்கு ஓரளவு எட்டப்பட்டிருக்கிறது. என்றாலும், தரமான கல்வி இலவசமாக ஏழை மாணவர்களைச் சென்றடையும் நாள் தொலைதூரத்தில் இருப்பதே கல்வி குறித்த அக்கறை கொண்டவர்களின் கவலையாக நீடிக்கிறது.

- M. தரணி

# உயிர் விற்பனை

- கவிஞர் நிவேதிதா

பிரசவ அறை
வாசலில்
“பெண் குழந்தை”
என்றதும்
அதுவரை
என் கண்ணில் இருந்த
ஈரம் ஏனோ
மெதுவாய் இதயத்தில்
இறங்கியது...

அவள்
கொலுசொலியிலும்
புன்னகையிலும்
வரும் இசை போல
இதுவரை எந்த
இசையமைப்பாளரும்
இசை அமைத்ததில்லை...

வீட்டில்
அதுவரை இருந்த
என் அதிகாரம்
குறைந்து போனது
அவள் பேச
ஆரம்பித்த பிறகு...

“அப்பாவுக்கு முத்தம்“
என நான் கெஞ்சும்
தோரணையில்
கேட்டால்
ஒரு முத்தம் கொடுத்துவிட்டு
ஏதோ எனக்கு
சொத்தெழுதி வைத்த
புன்னகை வீசி செல்வாள்...



என்னுடன் தினமும்
விளையாடிய
என் ரோஜா பூ,
பூப்பெய்த நாளில்
கதவோரம் நின்று
என்னை பார்த்த
பார்வையில் இருக்கிறதடா
உலகின் அத்துணை
பிரிவினைவாதமும்...

அவள்
பாதுகாப்பாய் வீடு
திரும்பும் வரை
உயிரற்ற உடலாய்
காத்திருந்த நொடிகளில்
செத்து பிழைக்கும்
நான் தினம் தினம்
அவளை பிரசவித்தேன்...

இரு முறை தாய் வாசம்
தெரியவேண்டுமெனில்
பெண் பிள்ளை
பெற்றெடுங்கள்...
மகள்களின்
நேசிப்பெனும் சிறையில்
விடுதலை இல்லை
ஆயுள் தண்டனை மட்டுமே...



மகளில்லாத
தந்தையர்களே,
சகோதரியில்லாத
ஆண் மகனே,
எங்கேனும் தனியாய்
பெண்ணை கண்டால்
சுதந்திரமாய் செல்ல விடுங்கள்
தந்தைகள் காத்திருக்கிறோம்
அவள் வருகைக்காக...

# உயிரைப் பறிக்கும் செல்போன்கள்!

உலகம் கையில் அடங்கிவிட்டது. அனைத்து தகவல்களையும் உட்கார்ந்த இடத்தில் இருந்து நம்மால் பெற முடிகிறது. விஞ்ஞான வளர்ச்சி வியப்பை தருகிறது. ஆக்கப்பூர்வமாகவும் இது மனிதர்களுக்கு பயன்படுகிறது. ஒரு பொருள் உயர்ந்த நோக்கத்துக்காக படைக்கப்பட்டது என்றாலும் மனிதனின் எதிர்மறை எண்ணங்களால் அதை உள்நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த வரிசையில் தற்போது முதலிடம் பிடித்துள்ளது செல்போன். பாக்கெட்டில் பேனா இருக்கிறதோ இல்லையோ எல்லோரிடமும் செல்போன் ஆக்கிரமித்துவிட்டது. இதற்கு வயது வித்தியாசமின்றி அனைவரும் அடிமைகளாகிவிட்டனர். காலை கண்விழித்தது முதல் இரவு உறங்க செல்லும் வரை செல்போனில் தான் பொழுதை கழிக்கின்றனர். செல்போனில் அமைந்துள்ள பல்வேறு செயலிகளின் அம்சங்களை இளைஞர்கள்,



கல்லூரி மாணவ, மாணவிகள், பள்ளி மாணவர்கள் என்று அனைவரும் பயன்படுத்து கிறார்கள். தேடல் செயலியில் தவறாக ஒரு வார்த்தையை கொடுத்துவிட்டாலும் அது மோசமான வெப்சைட் இணைப்புக்கு கொண்டு சென்றுவிடுகிறது. இதை பார்க்கும் சிறுவர்களின் பிஞ்சு மனதில் நஞ்சு விளைத்தது போன்று அவர்கள் அதற்கு அடிமையாகிவிடுகின்றனர். அதன் பிறகு கலகலப்பாக விளையாடும் சிறுவர்கள் ஏதோ சிந்தனையில் தனிமையாகிவிடுகிறார்கள். பள்ளியில் சக மாணவியுடன் இனம் புரியாத ஈர்ப்பில் ஈடுபட்டு தவறுகள் நடப்பது பெருகிவிட்டது.

ஊடகங்கள், பத்திரிகைகள் கூட சமூக பொறுப்பை உணர்ந்து செய்திகள் வெளியிட்டாலும், சமூக ஊடகங்களுக்கு எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இருக்கிறது. யார் வேண்டுமானாலும் எந்த செய்தியையும், வீடியோவையும் அப்லோட் செய்ய முடியும். இதனால் உலகம் முழுவதும் அது பரவுகிறது. இதற்கு வழிமுறையை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். செல்போன் கலாச்சாரத்தின் விளைவால் தான் பொள்ளாச்சி பாலியல் பலாத்காரம் போன்று பல சம்பவங்கள் ஏற்படுகின்றன. இது சமூகத்தின் அமைதியையும், தனி மனிதன் எண்ணத்தையும் மாசு படுத்தும் செயலாகவே அமைந்துள்ளது. இதையெல்லாம் சுட்டிக்காட்டி தான் மதுரை உயர்நீதிமன்ற கிளை, அணுகுண்டை போல ஆபத்தானது செல்போன் என்று கண்டனம் தெரிவித்துள்ளது. முகநூல், வாட்ஸ்ஆப் பயன்பாடுகள் அதிகரித்துவிட்ட நிலையில் சைபர் குற்றங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இது குறித்து விசாரிக்க சைபர் கிரைம் என்ற தனிப்பிரிவு போலீஸ் செயல்பட்டாலும் குற்றங்களை தடுக்க எந்த வழிமுறையும் இல்லாமல் இருக்கிறது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த செல்போன் வாங்கி கொடுத்து அவர்களின் எதிர்காலத்துக்கு அவர்களே ஆப்பு வைக்கிறார்கள் என்பது தான் உண்மை. சமூகம், கலாச்சாரம், பண்பாடு ஆகியன குறித்த அறிவோ, விழிப்புணர்வோ இல்லாத பள்ளி மாணவர்கள் செல்போனில் வரும் வதந்திகளையும், புனையப்பட்ட வீடியோக்களையும் உண்மை என்று நம்பி பாதை மாறி செல்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கிறது. எனவே மாணவர்களின் எதிர்காலத்தையும், ஆரோக்கியத்தை கருதியும், சமூக சீரழிவை தடுக்க கருதியும் இணையதள சேவை, சமூக வலைதள சேவை பயன்பாட்டில் விதிமுறைகள் வகுத்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பது சமூக ஆர்வலர்களின் விருப்பமாக உள்ளது.

**- இர்வின்**

# பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பு

மக்கள் விசாரணை
அருணை முரசு
அரசியல் தீர்ப்பு
பீப்பிள் டுடே PEOPLE TODAY
நமது நகரம்
அரசியல் முத்திரை
ரிப்போர்ட்டர் வேர்ல்ட்
அதிரடி குரல்
கடல் துளிகள்
உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER
வெற்றி யுகம் POLITICAL & CRIME MONTHLY
ரிப்போர்ட்டர் விஷன்
தொட்டில் செய்தி
நாரிகாவி செய்தி
தமிழன் குரல்
திரை தீபம்
போலீஸ் ரிப்போர்ட்டர்
ஜித்தன்
சட்ட கேடயம்
நுண்ணறிவு
பாக்கியம் சினிமா
கடல்சிற்பி KADAL CHIRPI
THE DECEMBER MAIL
பேனா முள்
REPORTER FLASH
PRESS
அதிரடி தீர்ப்பு
நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE
செய்திகள் CHENNAI SEITHIGAL
புரசை எக்ஸ்பிரஸ்
விழா முரசு
தொகுதி முரசு THOGUTHI MURASU
மூன்றாம் கண்
உள்ளாட்சி சுடர்
முள்ளும் மலரும்
INDIA NEWS
ஸ்ரீ ஆஞ்சநேயர் விஜயம்
VADAPALANI XPRESS
பல்லவன் முரசு
மக்கள் பார்வை
மண்ணின் குரல்
விழிப்புணர்வின் குரல்
மெய் எழுத்து
தர்ம ராஜ்ஜியம்
FINE TIME
புதுவை ஒளி
சிலந்தி வலை SILANTHI VALAI
மக்கள் விருப்பம்
திங்கள் மலர் ENLIGHT THE PEOPLE
வீரத்தலைமுறை
தொழில் பார்வை
அமுதம் ரிப்போர்ட்டர்
FACE NEWS
PEOPLE PLUS English & Tamil Weekly

# மக்கள் தீர்ப்பு யாருக்கு?

புதிய இந்தியா பிறக்கப்போகிறது. நல்ல நாட்கள் வரப்போகின்றன. கறுப்புப் பணத்தையும், லஞ்சத்தை அறவே ஒழித்து விடுவோம்' 'மாநிலங்களின் கூட்டுறவுடன் மத்தியில் ஆட்சி' என்ற கவர்ச்சியான கோஷத்துடன் தொடங்கிய மோடி அரசு, அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்கே என்ற அணுகுமுறையை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ஜனநாயக ரீதியாக செயல்படும், தன்னாட்சி அமைப்புகள், ஒரே அதிகார மையத்தின் கீழ் கொண்டு வரப்படுவதாக கூறுகின்றன, எதிர்க்கட்சிகள். மாறுதல்களைச்

கடந்த, **2014** தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி, 'குஜராத் மாடல்' எனும் பிம்பத்தை முன்வைத்தார். பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி, வேலை வாய்ப்பு, முதலீடு, எல்லாரையும் அரவணைத்து முன்னேற்றம் (ஸப்கா சாத், ஸப்கா விகாஸ்) என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தியாவை வல்லரசாக்கும் தலைவராக, மோடி முன்னிறுத்தப் பட்டார். ஆனால், ஐந்து ஆண்டுகள் முடிந்த நிலையில், செய்த சாதனைகளை சொல்லாமல், தேசபக்தி, நாட்டு பாதுகாப்பு என புதிய விஷயங்களை, பா.ஜ.,



செய்ய விரும்புவது, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவது, எந்த ஆட்சி மாற்றத்திலும் நிகழக்கூடியது. நீண்ட நாட்களாக பின்பற்றிய நடைமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டன. இந்த மாற்றங்கள், நாட்டின் மக்களின் நலன் கருதிச் செய்யப்பட்டவை. இதை அரசியலாக்குவது தவறு என்கிறது, ஆளும் கட்சி. உண்மையில், நிகழ்ந்த மாற்றங்களும், அதன் விளைவுகளும் இந்த தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

பேச ஆரம்பித்ததிருக்கிறது. பொருளாதார முன்னேற்றம் பற்றிய விவாதத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும், ஜி.டி.பி., கணக்கீட்டை, தனக்கு வசதியாக மாற்றிக் கொண்டது. வேலை வாய்ப்பு பற்றி பேசவே மறுக்கிறது இந்த அரசு. பண மதிப்பிழப்பு, கிராமங்களில் எப்பேர்ப்பட்ட பாதகங்களை நிகழ்த்தியது என்பது பற்றிய எந்த ஆய்வும் இந்த அரசால் நடத்தப்படவில்லை.

ஜி.எஸ்.டி., கொண்டு வந்ததில், சிறு குறு நிறுவனங்கள் எப்படி சிதிலமாகின என்பது பற்றி, அறிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. திட்டக்குழுவை மாற்றியமைத்ததில் இருந்து துவங்கி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அதிருப்தி, சி.பி.ஐ.,யின் தலைமையில் குழப்பம், தலைமை கண்காணிப்பு அமைப்பில் குழப்பம், நிதி ஆணை யத்தின் வரம்பு எல்லைகளை குறைப்பது, ரிசர்வ் வங்கியின், ரிசர்வ் நிதியை அரசின் செலவினங் களுக்குப் பயன் படுத்த முயன்றது போன்ற பல விஷயங்களில், மாற்றங்களைச் செய்ய முயன்ற, பா.ஜ., அரசு பெரிதும் விமர்சிக்கப்பட்டது. இந்த மாற்றங்கள், அதன் தாக்கங்கள் சராசரி வாக்காளனை எந்தளவில் பாதித்திருக்கிறது, அது தேர்தலில் எதிரொலிக்குமா என்பதுதான் கேள்வி. கேள்விக்கு விடை, இருக்கும் ஆனா இருக்காது என்ற சினிமா நகைச்சுவை போல இருக்கிறது

இந்திய தேசிய காங்கிரசு தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 2004 - 2009 வரை நீடித்தது. ஆனால் தமிழகத்தில் அக்கூட்ட ணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறிவிட்டன. இதனால் 2014-ம் ஆண்டு நடந்த 16-வது மக்களவையில்தனித்து போட்டியிட்டு தோல்வியை சந்தித்தது. 2019-ம் ஆண்டின் மக்களவையை எதிர் கொள்ள உள்ள நிலையில் தற்போது காங்கிரஸ், மீண்டும் திமுக கூட்டணியில் போட்டியிட வுள்ளது. கடந்த தேர்தலில் நாடு முழுவதும் மோடி அலை வீசியதால் காங்கிரஸ் படுதோல்வி அடைந்த நிலையில், வரும் தேர்தலில் மோடி அலை வீசுமா



மோடி அரசு வந்த புதிதில், 'மத்திய அரசுக்கு ஆதரவாக அடுத்த தேர்தலிலும் ஓட்டு போடுவோம்' என, 39 சதவீதம் மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர். இதே போன்ற ஆய்வை தொடர்ந்து, ஒவ்வொரு, ஆறு மாதத்திலும் செய்து வந்ததில், கிடைத்த முடிவு மோடியின் செல்வாக்கு சரிகிறது என்பது தான். ஆய்வு முடிவுகள், தேர்தலில் எதிரொலிக்குமா என்ற அல்லது ராகுல் அலை வீசப்போகிறதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். என்றாலும், இந்திய தேர்தல் வரலாறு, நகர்ப்புற மக்களைவிட, கிராம மக்கள் தான் ஓட்டு போட்டவர்களில் அதிகம் என்கிறது என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிலையில் மக்கள் தீர்ப்பு யாருக்கு என்பதை வரும் 23ம் தேதி தெரிந்துவிடும்.

- முனைவர் ஆ.மவுரியன்

# ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பணிகள் என்னென்ன?

இந்தியாவில் 17-வது முறையாக நாடாளுமன்றத் தேர்தல் சூழலில் நம்மிடம் வாக்குகள் கேட்டு வரும் வேட்பாளர் வெற்றிபெற்று டெல்லி செல்லும்போது அவர் நமக்காக என்னென்ன பணிகளைச் செய்வார், அவரால் என்னென்ன செய்ய முடியும் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம்.

ஒரு எம்.பி.யின் பொறுப்புகள், பணிகள் குறித்து அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பாகச் சொல்லப்படவில்லை. எனினும், 105-வது கூறில் 3-வது உட்கூறில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரங்களும் பணிகளும் பேசப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றக் கமிட்டிகளில் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் பொறுப்புகளையும் பணிகளையும் நாடாளுமன்றமே அந்தந்தக் காலச்சூழல்களில் முடிவெடுக்கலாம் என்கிறது அரசமைப்புச் சட்டம். இது தவிர, பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு எம்.பி.க்குப் பல்வேறு பணிகள் உள்ளன.



சட்டம் இயற்றும் பணி: அவையில் முன்வைக்கப்படும் மசோதா தொடர்பான விவாதங்களில் ஒரு எம்.பி., பங்கேற்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார். அமைச்சர் அல்லாத ஒரு எம்.பி., தனிநபர் மசோதாக்களின் மூலம் சட்டரீதியான மாற்றங்களையும் பரிந்துரைக்கலாம்.

அரசமைப்புச் சட்டத்தில் அவ்வப்போது சட்டத் திருத்தம் செய்யப்படும்போது ஆதரித்தோ எதிர்த்தோ வாக்களிக்கும் உரிமையும் அவருக்கு உண்டு. மாநிலங்களின் எல்லைகளை மறுவரையறை செய்வது, சட்ட மேலவையை ஏற்படுத்துவது தொடங்கி உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் முதலிய அரசமைப்புச் சட்டத்தின் கீழான நிறுவனங்கள் தொடர்பாகச் சட்டமியற்றும்போதும் எம்.பி.க்கள், விவாதங்களில் பங்கேற்றுத் தங்களது கருத்துகளை முன்வைக்க முடியும்.

தேர்ந்தெடுக்கும் பொறுப்பு: ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நாட்டின் ஜனாதிபதி, துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் வாக்களிக்கிறார். மக்களவை உறுப்பினர் சபாநாயகரையும் துணைச் சபாநாயகரையும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிறார். மாநிலங்களவை உறுப்பினரோ மாநிலங்களவையின் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்.

நிதி தொடர்பான பொறுப்புகள்: மக்களுக்கு வரிவிதிப்பது தொடர்பான எந்த முடிவுகளும் மக்களவை உறுப்பினர்களின் அங்கீகாரமின்றி நிறைவேற்றப்படாது. நாட்டின் நிதிநிலை அறிக்கையும் மக்களவையின் அனுமதியைப் பெற வேண்டும். நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு நிதி கமிட்டிகளில் பங்குபெறுவதன் வாயிலாக, செலவிடப்படும் நிதி தொடர்பான முடிவுகளையும் கட்டுப்பாடுகளையும் செய்யும் வாய்ப்பும் மக்களவை உறுப்பினருக்கு உண்டு.

மேற்பார்வை செய்யும் பொறுப்பு: ஜனாதிபதி மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அது தொடர்பான

விவாதத்திலும் எம்.பி.யின் பங்கேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. உதவி ஜனாதிபதி, உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நீக்கத்தின்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களில் பங்குபெறுவார்கள்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அரசின் செயல்பாடுகளை விவாதிப்பதன் வாயிலாக அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் வைத்துள்ளார். கேள்வி நேரம், பூஜ்ஜிய நேரம், கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம், வெட்டுத் தீர்மானம் போன்றவை மூலம் இரண்டு அவைகளிலும் விவாதங்கள் வழியாக அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்.



பொதுக் கணக்குக் குழுக்கள், பொது மதிப்பீட்டுக் குழுக்கள், பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவை தொடர்பான கமிட்டிகளிலும் இடைக்காலக் கமிட்டிகளிலும் உறுப்பினராகப் பங்கேற்று அரசின் பணிகளை மேற்பார்வை செய்யலாம்.

தொகுதியின் குரல்: ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அவர் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதியின் குரலாகச் செயல்படுகிறார். தனது தொகுதியின் பிரச்சினைகள் குறித்துக் கேள்விகளையும் விவாதங்களையும் உருவாக்குகிறார். மாவட்ட ஆட்சியர் அளவில் செயல்படும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறப்பான பங்கேற்பைச் செய்ய முடியும். மத்திய, மாநில அரசு மட்டத்தில் செய்யப்படும் பணிகளிலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஊக்கத்துடன் ஈடுபடலாம்.

ஒரு தொகுதிக்கு ஐந்து கோடி: நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் மேம்பாட்டு நிதித் திட்டத்தின் அடிப்படையில் 1993 முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக ஆண்டுதோறும் தொகுதி நிதி ஒதுக்கப்பட்டுவருகிறது. ரூ.5 லட்சத்தில் தொடங்கி தற்போது ரூ.5 கோடியாக இருக்கும் இந்தத் தொகுதி மேம்பாட்டு நிதி, மாவட்ட நிர்வாகத்துக்கு விநியோகம் செய்யப்படும். பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து முறையே 15% மற்றும் 7.5% ஒதுக்க வேண்டும். அவை கட்டிடங்கள் போன்ற நீடித்த தன்மையுள்ள உடைமைகளாக இருக்கலாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி நிதியை மகாத்மா காந்தி தேசிய கிராம வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்துக்கான நிதியோடும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

தமிழக எம்.பி.க்களின் செயல்பாடு: 16-வது நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் தொகுதி நிதியை சராசரியாக 80%-க்கு மேல் தொகுதி மேம்பாட்டுப் பணிகளுக்குச் செலவிட்டிருக்கிறார்கள். ஆனால், நாடாளுமன்றத்தில் நடந்த விவாதங்களில் பங்கேற்பு, வருகை ஆகியவற்றில் தமிழக எம்.பி-க்களின் செயல்பாடு தேசிய அளவில் சராசரிக்கும் கீழே இருக்கிறது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களில் பங்கேற்பு, தேசிய சராசரியாக 80% உள்ளது. தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களோ சராசரியாக 78% நாட்களே வருகை தந்துள்ளனர். விவாதங்களில் தேசியப் பங்கேற்பு சராசரி 63.6% ஆக உள்ளது. தமிழக உறுப்பினர்கள் 43.6% அளவிலேயே விவாதப் பங்கேற்பைச் செலுத்தியுள்ளனர் என்பது வருத்தமான விஷயம்.

**- M. சத்யராஜ்**

ஒரு பக்க சிறுகதை

# மகிழ்ச்சிக்கு யார் காரணம்?

நட்சத்திர உணவு விடுதி ஒன்றில் சில மேல்தட்டுப் பெண்கள் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்தனர். அது சமயம் திடீரென்று ஒரு கரப்பான்பூச்சி பறந்து வந்து அவர்களில் ஒரு பெண்மணியின் கையில் அமர்ந்தது. உடனே அந்தப் பெண் அலறினாள், ஆடினாள், ஓடினாள்! அந்தப் பூச்சியோ அவளை விட்டுப் பறந்து சென்று வேறு ஒரு பெண்ணின் மேல் உட்கார்ந்தது. உடனே அந்தப் பெண்ணும் கத்தினாள், குதித்தாள், அதை வேகமாக வேறு ஒரு பெண்ணின் மேல் தட்டி விட்டாள்!

இதே விளையாட்டு மீண்டும் தொடர்ந்தது. இதனால், அங்கு மற்ற மேசைகளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களும் பதறி எழுந்து ஓட, பல பீங்கான் தட்டுக் கள் உடைந்தன. உணவுப் பொருட் கள் சிந்தின, கொட்டின. பலரது உடைகளும் வீணாயின! இந்தக் களேபரத்தைப் பலரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அந்தப் பூச்சி, விடுதிப் பணி யாளர் ஒருவரின் வலது கையில் போய் அமர்ந்தது. அவரோ உடனே அமைதியானார். அசையாது நின்றார். நிதானித்தார். தனது இடது கையால் அந்தக் கரப்பான் பூச்சியைப் பிடித்து, விடுதியின் தோட்டம் வரை சென்று அதைப் பறக்கவிட்டு வந்தார்!

ஐயா, சற்றே யோசியுங்கள். அங்கு நடந்த பிரச்சினைகளுக்கு உண்மையான காரணம் என்ன? அந்தக் கரப்பான் பூச்சியா அல்லது அந்தச் சூழ்நிலையை அந்தப் பெண்கள் கையாண்ட தவறான முறையா? அந்தப் பூச்சியை விடுதியின் பணியாள் பிடித்து வெளியே விட்டது போல் அந்தப் பெண்களும் நடந்து கொண்டிருந்தால் பல நஷ்டங்களைத் தவிர்த்து இருக்கலாமே!

தம்பி, நம் அன்றாட வாழ்க்கையிலும் அப்படித் தானே? அலுவலகத்தில் மேலா ளர் ஒருவரைத் திட்டலாம். ரயிலில் பயணிக்கும் பொழுது ஒருவருக்கு பணம் தொலைந்து போகலாம். அல்லது செய்யும் தொழிலில் நஷ்டம் வரலாம். இவை ஏற்படுத்தும் பாதிப்பு என்பது, அதை அந்த நபர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதைப் பொறுத்தது அல்லவா? படபடவென்று எதிர்ப்பைக் காட்டாமல் நிதானமாக சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும் அல்லவா? தீதும் நன்றும் பிறர் தர வாரா! என்பது அதுதானே.

அமெரிக்க நடிகை வலேரி பெட்ரி னேலி சொல்வது போல, எந்தச் சூழ்நிலை யிலும் மகிழ்ச்சியாய் இருப்பதா இல் லையா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். வாழ்க்கையில் மனஅழுத்தம் தருபவை நடக்கத்தான் செய்யும். ஆனால், அவைகள் உங்களைப் பாதிக்க விடுவதும் விடாததும் உங்கள் கையில் தான் இருக்கிறது! உண்மை தானே? சிலர் எல்லாவற்றுக்கும் படபடத்து காரியத்தைக் கெடுத்துக்கொள்கிறார்கள் என்றால், வேறு பலரோ மகிழ்ச்சியின் அளவுகோல் பணம்தான் என நினைத்துக்கொள்கின்றனர்! இணை யத்தில் படித்த இந்த அனு பவத்தைக் கேளுங்கள். ஒரு பணக்கார அப்பாவிற்கு ஒரே மகன். 8 வயது. தந்தை பணம் பணம், வேலை வேலை என்று அலைபவர். இரவு அவர் வீடு திரும்பும் முன்பு மகன் தூங்கி விடுவான். காலை யிலும் பேச நேரமிருக்காது. அவன் அப் பாவைப் பார்ப்பதே அரிதாகி விட்டது.

ஒரு நாள் அதிசயமாக அப்பா மாலை 6 மணிக்கே வீட்டுக்கு வந்து விட்டார். சிறுவனுக்கு ஏக மகிழ்ச்சி. அப்பாவுடன் வெளியில் சென்று விளையாட ஆசைப்பட்டான். ஆனால், அவரோ 8 மணிக்கு விமான நிலையம் செல்ல வேண்டு மென்றார். போகா விட்டால், ஓர் முக்கியமான நபரைப் பார்க்க முடியாமல் போய்விடுமென்றும், அதனால் தொழிலில் நஷ்டம் ஏற்படும் என்றும் கூறி அவனுடன் விளையாட மறுத்து விட்டார். முகம் வாடிப்போன மகன், தந்தை யிடம் “ஓர் ஆண்டுக்கு நீங்கள் எவ் வளவு சம்பாதிக்கிறீர்கள்?” எனக் கேட்டான். அவரோ அது பெரிய தொகை என்றும் அவன் வய தில் அவனுக்கு அது புரியா தென்றும் சொல்லிவிட்டார்!

ஆனாலும் சிறுவன் விட வில்லை. “அப்பா, நீங்கள் 2 மணி நேரத்தில் எவ்வளவு சம் பாதிக்கிறீர்கள் என்பதையாவது சொல்லுங்களேன்” எனக் கேட் டான். சிறிது யோசித்த அவர், “என்ன, சுமார் 2000 ரூபாய் இருக்கும்” என்றார் பெருமையாக! அதைக் கேட்ட சிறுவனோ உடனே உள்ளே ஓடினான். தன் அறையிலிருந்து அவனது உண்டியலை எடுத்து வந்தான். தந்தையிடம், “அப்பா இதில் இரண்டாயி ரம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இதை நீங்களே வைத்துக் கொண்டு இரண்டு மணி நேரம் என்னுடனேயே இருந்து விளையாடுங்களேன்” என்றான்!

அதைக்கேட்ட தந்தை அதிர்ந்து போனார். அந்தப் பிஞ்சு உள்ளத்தின் வலியை, ஏக்கத்தைப் புரிந்து கொண்டார். ஞானம் பிறந்தது. பணம் சம்பா திப்பதற்கு நேரம் செலவழிப்பதைப் போலவே மகனுக்கும் மனைவிக்கும் நேரத்தை ஒதுக் கிப் பயன்பெறத் தொடங்கினார். நம்மில் பலரும் இப்படித் தானே, பணம் பணமென நமது நேரத்தை அதைப் பெருக்கு வதிலேயே செலவழித்து விட்டு, வாழ்வின் பல இனிய அனுபவங் களை இழந்து விடுகிறோம்.

‘நமது மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் நாமே காரணம். மேலும் மகிழ்ச்சியான வாழ்விற்கு செல்வத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளும் குணத்தைக் கைவிட வேண்டும்‘ என்கிறார் சாணக்கியர். நீங்களும் அனுபவத்தில் பார்த்து இருப்பீர்களே!

- ஆசிரியர்

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

# அரசியல் தீர்ப்பு

## ARASIYAL THEERPPU


மலர் - 1 இதழ் - 6 மே - 2019 தமிழ் மாதஇதழ் விலை ₹ 10

Vol - 1 ISSUE - 6 MAY - 2019 TAMIL MONTHLY PRICE ₹ 10

ARASIYAL THEERPPU




# இடைத்தேர்தலில் வெற்றி யாருக்கு?

## சிறப்புப் பார்வை

MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**